என்கிறபடியே தேவரீர் நரஸிம்ம ரூபியாய் திரு அவதாரம் செய்தருளி ராத்ரி, பகல், உள், வெளிப்புறம், வீரம்புகளினால், ஆகாசம், பாதாளம், அக்னி, விஷம், ஜலம், ஔஷதம், மருகாதிகள் மநுஷ்யாதிகள், ஆயுதங்களினாலேயும் வதிக்கப்படேனென்று ருத்ரனிடத்திலே, பிரஸாதம் பெற்ற ஹிரண்யகசிபுவை தேவரீர் ஸந்த்யா காலத்திலே, த்வாரப்ரதேசத்திலே, நரஸிம்ம ரூபியாய், நகாயுதங்களினாலே வதித்தருளித்தும்-

## ॥ *வாமனாவதார:* ॥

தண்டக்ருஷ்ணாஜினதர: கௌபீனபரிதானவான் ।
கமண்டலும் கரேபிப்ரன் சத்ரம் வாமனரூபத்ருத் ॥

க்ஷிதிம் பதைகேன பலேர் விசக்ரமே நபச்சரீரேண திசச்சபாஹுபி: ।
பதம் த்விதீயம் க்ரமசஸ்த்ரிவிஷ்டபம் நவை த்ருதீயாயததேவமன்வபி: ॥

வைரோசனேர் பலவதோ பலினஸ்ஸகலாம்புவம் ।
ச்சலாம்க்ருஹீதுமுத்யுக்த: காச்யபாத்வாமனோபவத் ॥

த்ரிவிக்ரம ஸ ஏவாஸீத்ரிலோக க்ரமணோத்யத: ॥ என்கிறபடியே தேவரீர் வாமன - த்ரிவிக்ரம ரூபியாய் திரு அவதாரம் செய்தருளி பூம்யந்தரிக்ஷம் ஸ்வர்கங்களையும் ஓர் அடியினாலே அளந்து மகாபலியையும் சிறையில் வைத்தருளித்தும்-

## || பரசுராமாவதார: ||

மஹாபல க்ஷத்ரவதாத்பூபாரஸ்ய நிவாரக: ।
ஜமதக்னி ஸுதோ ராமோ பபூவாத்யந்த்த தாருண: ॥

த்ரிஸ்ஸப்த க்ருத்வோ பூபாலான் ஹத்வா தத்ருதிரோதகை: ।
ஸந்த்தர்ப்பயாமாஸ பித்ரூன் தஸ்மை ராமாத்மனே நம: ॥

என்கிறபடியே தேவரீர் பரசுராமனாய் திரு அவதாரம் செய்தருளி, மூவேழு இருபத்தொரு தலைமுறையிலுள்ள க்ஷத்ரியர்களையும் ஸம்ஹரித்து அவர்கள் ரத்தத்தினாலே பித்ருக்களுக்கு தில தர்ப்பணம் பண்ணியருளித்தும்-

## || தசரதராமாவதார: ||

பூத்வா தாசரதிஸ்ஸிந்துமாபத்வா ஜல ஸம்சயம் ।
ராவணம் யுதி யோ ஜக்னேதஸ்மை ராமாத்மனே நம: ॥

ஜாதேவம்சே ரகூணாம் முனிவர வசனாத் தாடகாம் தாடயித்வா ।
க்ருத்வா புண்யாமஹல்யாம் த்ருடித ஹரதனுர்மைதிலீவல்லபோபூத் ॥
பராப்யாऽயோத்யாம் நிதேசாத் பிதுரடவிமகாத்வீதஸீதோஸ்தவாலி: ।
பத்தாப்திர் த்வஸ்தலங்கோதளித தசமுகஸ் ஸீதயா ராஜ்யமாப ॥
தேவபீடாகரான்ஹந்தும் ராக்ஷஸான் ராவணாதிகான் ।
ஆஸீத்தாசரதீராமஸ்ஸாயுதஸ்ஸ தபோதன: ॥

என்கிறபடியே தேவரீர் தசரத ராமனாய் திரு அவதாரம் செய்தருளி, விச்வாமித்ர பரிபாலனம் பண்ணியருளியும், தாடகாப்ராணாபஹரணம் பண்ணியருளியும், அஹல்யா சாப விமோசனம் பண்ணியருளியும், ஹரகோதண்ட பக்னம் பண்ணியருளியும், ஸீதாதேவியை பாணிக்ரஹணம் பண்ணியருளியும், அயோத்யா புர ப்ரவேசானந்தரம் பித்ரு வாக்ய பரிபாலனம் பண்ணி அருளியும், பரசுராம கர்வ பலபராக்ரமபஞ்ஜனம் பண்ணியருளியும், ஸீதா லக்ஷ்மணாப்யாம் ஸஹ, தண்டகாவனம் ப்ரவேசித்து விராதவதம் பண்ணியருளியும் சூர்ப்பணகியை நாஸிகாச்சேதனம் செய்தருளியும், கர த்ரிசிர தூஷணாதிகளை சிர: கண்டனம் பண்ணியருளியும், மாரீச மாயாவினோத பங்கம் பண்ணியும், ஜடாயு மஹாராஜனுக்கு மோக்ஷம் ப்ரஸாதித்தருளியும், ஹனுமத் ஸமேதராய் ஸுக்ரீவரோடு ஸக்யம் பண்ணி, வாலியை நிக்ரஹம் பண்ணி, ஸுக்ரீவனை கிஷ்கிந்தாபுரியிலே பட்டங் கட்டியருளித்தும்,

பரித்யக்த்வாமயாலங்கா மித்ராணி ச தனானி ச ।
த்யக்த்வா புத்ராம்ச்ச தாராம்ச்ச ராகவம் சரணம் கத: ॥

என்கிறபடியே - விபீஷண ஆழ்வானுக்கு அபயப்ரதானம் பண்ணி அருளியும் , ஸமுத்ரத்தில் திரு அணை கட்டியருளியும், லங்காபுரி என்கிற படை வீட்டிலே பத்துத் தலையும், இருபது புஜமுமாயும் இருப்பானொரு அஸுரன், அவன் ப்ரம்ம ருத்ரேந்த்ராதிகளினாலும் ஜயிக்கப் படாதவனாய் இருப்பான். அவன் தேவேந்திரனோடு யுத்தம் பண்ணி வஜ்ராயுதத்தைப் பரித்தும்; வருணனோடே யுத்தம் பண்ணி நாகபாசத்தைப் பரித்தும்; குபேரனோடே யுத்தம் பண்ணி புஷ்பக விமானத்தைப் பரித்தும்; யமனோடே யுத்தம் பண்ணி கால தண்டத்தைப்

பரித்தும், ஐராவத, புண்டரீக, வாமன, குமுத, அஞ்ஜன, புஷ்பதந்த,ஸார்வபௌம, ஸுப்ரதீகமென்னும் சொல்லப்பட்ட அஷ்டதிக்கஜங்களோடு கூட யுத்தம் பண்ணி, மஹாமேரு பர்வதமென்கிற கைலாய பர்வதத்தை ஒரு கந்துகமாகவிநோதித்தும் இப்படிப்பட்ட அதிபுஜபல பராக்ரமனாயிருக்கிற ராவணனை ஸம்ஹரித்தருளி, விபீஷணாழ்வானுக்கு லங்காராஜ்யத்தை ப்ரஸாதித்தருளியும், ஸீதாதேவியுடன் கூட ஸுக்ரீவன் முதலான ஐம்பது வள்ளம் வானர ஸேனைகளுடன் கூட புஷ்பக விமானாரூடராய் ஸுமுகூர்த்தத்திலே திருவயோத்திக்கு எழுந்தருளி-

பத்ரபீடமதிஷ்ட்டித மப்ஜயா சத்ரசாமரகரைஸ்ஸ லக்ஷ்மண: ।
ப்ராத்ருபி: ப்லவகபுங்கவைர்யுதம் ராகவேசமநிசம் நமாம்யஹம் ॥

என்கிறபடியே பட்டாபிஷிக்தராய் ராஜ்யபரிபாலனம் பண்ணி அருளித்தும்,

## ॥ *பலபத்ர ராமாவதார:* ॥

ஸமாக்ருஷ்ய ஹலாக்ரேண முஸலேனாமரத்விஷ: ।
காதயாமாஸ யஸ்தஸ்மை நமஸ்ஸங்கர்ஷணாயதே ॥

ய: பருத்வீமஸுரபயாதி கின்ன சித்தா முத்தர்த்திதும் முஸலஹலாயுதோ பபூவ ।
காளிந்தீ கர்ஷண தர்சிதாத்மவீர்யஸ்தம் தேவம் சரணமஹம் கதோஸ்மி ராமம் ॥

என்கிறபடியே தேவரீர் பலபத்ரராமனாய் திரு அவதாரம் செய்தருளி, துஷ்டநிக்ரஹ சிஷ்டபரிபாலநம் பண்ணியருளித்தும்.

## ॥ *ஸ்ரீக்ருஷ்ணாவதார:* ॥

பூபார ஹரணார்த்தாய யதுவம்சேவதீர்யச ।
மர்தயாமாஸ கம்ஸாதீன் தஸ்மை க்ருஷ்ணாத்மனே நம: ॥

பூமேஸ்ஸுரேதர ஸமூஹ விமர்திதாயா:
க்லேசவ்யபாகலயிதும் ச்ரிதக்ருஷ்ண வேஷ: ।
ஜாத: கரிஷ்யதி ஜனானுபலப்ய கோபான்
கர்மாணி சாத்மமஹிமோப நிபந்தனானி ॥

என்கிறபடியே தேவரீர் வஸுதேவரிடத்திலே ஸ்ரீக்ருஷ்ணனாய் திருஅவதாரம் செய்தருளி அர்த்தராத்ரியிலே பத்மபுரத்திலெழுந்தருளி மாயச்சகடனையுமுதைத்தும் பூதனா குசநஞ்சை அழித்தும் கோப கன்னிகைகளுடைய வஸ்த்ரங்களை அபஹரணம் பண்ணியருளித்தும், கோபஸ்ரீகளோடே வர்த்திச்சும், கோவர்தனபர்வதமெடுத்தும், கோரக்ஷணை பண்ணியும், காளியன் என்கிற பாம்பை காலாலே மர்த்தனம் பண்ணியும், குவலயா பீடம் என்கிற யானையை கொம்பை ஒடித்தும், குழலூதியும்-வேணுவிநோதம் பண்ணி அருளித்தும் கம்ஸ சிசுபாலநாதிகளை வதித்தருளியும், ருக்மிணீ ஸத்யபாமா முதலான அஷ்டமஹிஷிகளையும் திருக்கல்யாணம் செய்தருளியும், நரகாஸுரனை ஸம்ஹரித்தருளியும்; பதினாராயிரம் ராஜகன்யகைகளை ஒரு முகூர்த்தத்திலே திருக்கல்யாணம் செய்தருளியும் பாண்டவர்களுக்கு தூது நடந்தும்; அர்ஜுனனுக்குச் சாரதியாய் எழுந்தருளியிருந்து பூமி பாரத்தைத் தீர்த்தருளியும்-

### || கல்க்யாவதார: ||

யுகாந்த ஸமயே விஷ்ணு: கல்கிரூபோ பவிஷ்யதி ।
கட்ககேடேக ஹஸ்தாப்யாம் ம்லேச்சாதீன் ஸம்ஹரிஷ்யதி ॥

பாஷண்டான் கலிகலுஷாஹ்ருத ஸ்வதர்மான்
நிச்சேஷம் ஸபதி நிராகரிஷ்ணுரீச: ।
ய: கல்கீபவதி நிதாந்த கோரரூப:
தம்தேவம் சரணமஹம் கதோऽஸ்மிவிஷ்ணும் ॥

என்கிறபடியே தேவரீர் கல்கிரூபியாய் திரு அவதாரம் செய்தருளி, கலியுகாந்தத்திலே பூமிபாரத்தைத் தீர்ப்பதற்குக் காரணமாக ஸகலருடைய ஹ்ருதயங்களிலும் அந்தராத்மாவாய் எழுந்தருளி இருக்கிற தேவரீர் திரு அவதாரங்களிலே தத்கால ஸம்பவராய் அறிந்துமறியாமலும் உபாஸிக்கப்பட்டது.

### || அந்தர்யாமித்வமாவது ||

அணோரணீயம் பரம்மாணம்மஹாந்தம் மஹத: ப்ரபும் ।
ப்ரணம்ய ஜகதாமீசமஜமக்ஷய மவ்யயம் ॥

"அணோரணீயான் மஹதோ மஹீயான் ஆத்மாகுஹாயாம் நிஹிதோஸ்ய ஜந்த்தோ: । என்றும்-தஸ்மாத் ஹ்ருதய கமலாந்தராகாசோபலப்த வைச்வானர சிகாயாம் த்ரிகுணாத்மகோ விஷ்ணு: பரமாத்மா திஷ்டதி ॥ "அங்குஷ்டமாத்ரோ ஹ்ருதயே ஸன்னிவிஷ்ட: । தஸ்துஷாமந்தராத்மா" என்கிறபடியே

ஹ்ருத்பத்ம கர்ணிகாமத்யே சுத்த தீப சிகாக்ருதிம் ।
அங்குஷ்டமாத்ரமமலம் த்யாயேதோங்காரமீச்வரம் ॥
ஹ்ருதயேக்னிசிகாமத்யே பரமாத்மா வ்யவஸ்தித: ॥

"தஸ்யாச்சிகாயாமத்யே பரமாத்மா வ்யவஸ்தித: ॥" என்கிறபடியே ஸர்வாந்தர்யாமியாய் எழுந்தருளி இருக்கின்ற தேவரீர் ப்ராணிகள் குணத்ரய பரவசராகையாலும் அதுப்படியாக சப்தாதி விஷய ப்ரமாணமாகையாலும், ப்ரமாண, ப்ரமேய, ப்ரமாத்ர, பரிபவ சீலராகையாலும், லீலாவிபூதியிலே தேவரீருடைய அந்தர்யாமித்வத்தை ப்ராபிக்க ஸமர்த்தர் ஒருவருமில்லை.

### || அர்ச்சாவதாரமாவது ||

மானுஷார்சாத்மனாசாஹம் க்ராமேக்ராமே க்ருஹேக்ருஹே ।
பும்ஸி பும்ஸி பவிஷ்யாமி தாருலோஹசிலாமய: ॥

ஸுரூபா ப்ரதிமாப்ரோக்தா சோபனா த்ருஷ்டி ஹாரிணீ ।
மனோஹரா ப்ரஸன்னாஹி மாமகீ சில்பி சோதிதா ॥

ஸ்தாபகஸ்ய தபோ யோகாத் பூஜாயாச்சாதி சாயனாத் ।
ஆவிரூபாஸ்ய பிம்பஸ்ய ஸதாஸன்னிஹிதோஹரி: ॥

பரத்வம் நிஷ்களம் ப்ரோக்தம் வ்யூஹம் ஸகலமுச்யதே ।
வைபவந்த்வவதாராணி ஹருத்கதந்த் வந்தராத்மகம் ॥

ப்ரதிமாதிஷு ஸான்னித்யம் விமானார்ச்சன முச்யதே ॥

ஸுவர்ண வர்ணம் ரக்தாஸ்யம்ரக்தநேத்ரம் ஸுகோத்வஹம் ।
சுகபிஞ்ஜாம்பரதரம் விஷ்ணும் ப்ரணவ ரூபிணம் ॥

கிரீடஹார கேயூர ப்ரலம்ப ப்ரம்ம ஸூத்ரிணம் ।
ஸ்ரீவத்ஸாங்கம்சதுர்பாஹும் சங்கசக்ர தரம்பரம் ॥

தக்ஷிணேனைக ஹஸ்தேன பக்தானாமபயப்ரதம் ।
வாமேனாப்யன்ய ஹஸ்தேன ஸ்வகட்யமவலம்பிதம் ॥

ஏவம் ஸங்கல்ப்ய மதிமான் அர்ச்சயேத் புருஷோத்தமம் ॥

அர்ச்சாவதார ரூபேண லோகே஽ஸ்மின் சதுரானன ।
அவதாரம் கரிஷ்யாமி ஹ்ரியா லக்ஷ்ம்யா ஸமன்வித: ॥

வைதிகேன விதானேன பக்த்யா சாவாஹனே க்ருதே ।
பக்தானுகம்பயா தேவோ பிம்பம் வ்யாய்யைவ திஷ்டதி ॥

என்கிறபடியே தேவரீருடைய திவ்ய மங்கள விக்ரஹத்தை ப்ரதிஷ்டித்து ஜபஹுத அர்ச்சன த்யானமென்றும் சொல்லப்பட்ட சதுர்வித பகவத் ஸமாச்ரயணத்தினால் சதுர்வித வர்ணபலமும் சதுர்வித புருஷார்த்தங்களும் அதாவது தர்ம, அர்த்த, காம, மோக்ஷ ப்ராப்தியும் சொல்லப்பட்டது.

அதாயம் தேஹீ ஜன்ம க்ருத்வா பார்யாமய பாசநிபத்திதோ பகவன் மாயயாமோஹிதத்வாத்,காமக்ரோதலோப மோஹமதமாத்ஸர்ய ஹிம்ஸாதீனி கரோதி । ததோம்ருதிம் ப்ராப்ய, யோனி த்வாரேண நிஷ்க்ரம்ய பாபீயஸீம் யோனிம் ப்ராப்ய புனர்ஜாயமான: ஸ்வர்க நரக பலேஷு கர்ம ஸுப்ரவர்த்ததே । தஸ்மாத் பகவன் மாயா மோஹிதத்வாத் பகவந்தம் ஸமாச்ரித்ய-என்கிறபடியே பக்த்யா நாராயண முபாஸீத । துதுபாஸனாத், ஸோபிபக்தவத்ஸலாத் பக்தானுகம்பயா ஸ்வமாயாம் விமோசயதி । தத:ஸம்யக் ஞானம் ப்ரவிசதி । பச்சாத் ஆச்ரம தர்ம ஸம்யுக்தோ பகவதாராதனம் கரோதி । ததாராதனேன ஸம்ஸாரார்ணவ நிமக்னோ ஜீவாத்மா பரமாத்மானம் நாராயணம் பச்யதி । ஸோப்யபுனராவ்ருத்திகம் திவ்யலோகம் ப்ராபயதி । பச்சாத் க்ருத க்ருத்யோ பவதி । ஸம்ஸாராண்முக்தி: மோக்ஷ: । ததபி ஸமாராதன விசேஷாச்சதுர்வித பதாவாப்தி: ஸாலோக்யம் ஸாரூப்யம், ஸாமீப்யம், ஸாயுஜ்யமிதி । ஆமோத ப்ராப்திஸ்ஸாலோக்யம் । ப்ரமோத ப்ராப்திஸ் ஸாமீப்யம் । ஸம்மோத ப்ராப்திஸ் ஸாரூப்யம் । வைகுண்ட ப்ராப்திஸ்ஸாயுஜ்யமிதி । நித்யானந்த அம்ருதரஸ பானவத் ஸர்வதா த்ருப்திகரம் பரமாத்மனோ நித்ய நிஷேவனம் பரஞ்ஜ்யோதி: ப்ரவேசனம் । "தத்விஷ்ணோ: பரமம்பதம் ஸதாபஸ்யந்தி ஸூரய: ।" இதி ச்ருதி:। பகவந்தம் நான்யதா ப்ராப்னோதீதி । என்றும் - ப்ரவ: பாந்த்த மந்தஸோ தியாயதே மஹே

ஸூராய விஷ்ணவே சார்ச்சத । என்றும் - த்ருதோர்த்வ புண்டரம் பரமீஸிதாரம் நாராயணம் பூஜயதிஸ்வபக்த்யா । அர்க்யாதிபி: புருஷஸூக்த மந்த்ரைஸ் ஸம்ப்ரானுயாத் விஷ்ணுபதம் மஹாத்மா ॥ என்றும் சொல்லுகிறபடியே -

நவிஷ்ண்வாராதனாத் புண்யம் வித்யகர்ம ச வைதிகம் ।
தஸ்மாத்திவாதௌ மத்யாஹ்னே நித்யமாராதயேத்தரிம் ॥

யஸ்மத்யாவத்தினே ஜீவே தாவத் ஸம்பூஜயேத்தரிம் ।
பாபைர் ந லிப்யதே மர்த்யோ ஹரிமந்திரமாப்னுயாத் ॥

என்கிறபடியே ... ச்ருதி ஸ்ம்ருதியில் ஸித்தமாகையால், அல்லாத பரத்வாதிகளினாலும் அர்ச்சாவதாரமே ஸர்வ ஸுலபம் । அர்ச்சாவதாரமும் இரண்டு விதமாக சொல்லப்பட்டது.

ஸாகாரம் ச நிராகாரம் பவேதாராதனம் த்விதா ।
அக்னௌ யஜேன் நிராகாரம் ஸாகாரம் பிம்ப பூஜனம் ॥

ஸ்தண்டிலே ச ஜலேசைவ ஹ்ருதயே ஸூர்யமண்டலே ।
ஆராதனம் நிராகாரமதஸ்ஸாகார முத்தமம் ॥

ஸர்வாவயவ ஸம்பூர்ணம் சதுர்பாஹும் கிரீடினம் ।
ஏவம் க்ருத்வா விதானேன ஸாகாரமபிதீயதே ॥

சக்ஷுஷ: ப்ரீதி ஜனனான் மனஸோ ஹ்ருதயஸ்ய ச ।
ப்ரீத்யா ஸம்ஜாயதே பக்தி: பக்தஸ்ய ஸுலபோ ஹரி: ॥

என்றும் மேலும் இரண்டு விதமாக சொல்லப்பட்டது.

க்ருஹார்சாலயார்ச் சேதி பேரபூஜா ச ஸாத்விதா ।
பல்யுத்ஸவாதிபிர்திவ்யை: பூர்ணத்வாத் ஸர்வ விக்ரஹை: ॥

பல்யுத்ஸவாதிபிர்திவ்யை: ஹீனா தஸ்மாத் க்ருஹார்ச்சனா ।
ஸமூர்த்தார்ச்சா த்விதா ப்ராஹு: க்ருஹேதாமணி சானயோ: ॥

அக்னிஹோத்ராச்ச வேதாச்ச ததாயக்ஞாஸ் ஸதக்ஷிணா: ।
ஹரேர்நித்யார்ச்சனஸ்யைதே கோட்யம்சேநாபிநோஸமா: ॥

ஸர்வேபி வைதிகாசாரா: ஸர்வேயக்ஞஸ்தபாம் ஸி ச ।
விஷ்ணுபூஜாவிதேர் பேதாஸ் தத்கர்மபலதோ ஹரி: ॥

ஆராதனானாம் ஸர்வேஷாம் விஷ்ணோராராதனம் பரம் ।
யேனகேன ப்ரகாரேண விஷ்ணோரர்ச்சன முத்தமம் ॥

ஆத்மார்த்தம் வா பரார்த்தம் வா க்ருஹே தேவாலயேபி வா ।
அர்ச்சனம் வாஸுதேவஸ்ய லக்ஷகோடி குணம் பவேத் ॥

ஸாமான்யமக்னிஹோத்ரம்ஸ்யாத் ஸர்வேஷாம் க்ராமவாஸினாம் ।
அனாஹிதாக்னி விப்ராணாம் அக்னிஹோத்ர பலப்ரதம் ॥

ஸர்வேஷா மாஹிதாக்னீனாம் ந்யூனாதிக்யாதி பூரணம் ।
"அதிரிக்தம் கர்மணோ யச்சஹீனம் தத்பூர்ணமர்ச்சனாத் தரே ॥"

இதி ச்ருதி: ।

தஸ்மாத் ஸர்வ ப்ரயத்னேன க்ராம மத்யாலயார்ச்சனம் ।
அதவா பச்சிமே தஸ்ய கல்பயித்வார்ச்சயேத்தரிம் ॥

விஷ்ண்வர்ச்சாரஹிதேக்ராமே விஷ்ண்வர்ச்சாரஹிதேக்ருஹே ।
தீர்த்தபானம் ஸுராபானம் அன்னம் கோ மாம்சபக்ஷணம் ॥

விஷ்ண்வாலய விஹீனேது தத்தேசே நவஸேத்புத: ।
விஷ்ண்வாலய விஹீனஸ்து ஸதேசஸ்த்வாஸு ரஸ்ம்ருத: ॥

தஸ்மாத் ஸர்வப்ரயத்னேன வைதிகேனைவ பூஜயேத் ॥

ப்ரமிதோயஜமானோபி அவிச்சின்ன ப்ரவர்த்தனாத் ।
விப்ராதீனாம் ச ஸர்வேஷாம் தத்தத்க்ராம நிவாஸினாம் ॥

முக்யமாஹபுராப்ரம்ம பேரபூஜனமாலயே ।

ஆலயார்ச்சனையும் இரண்டு விதமாக சொல்லப்பட்டது.

ஆலயார்ச்சா விதிஸ்ஸோபி த்விதா விஷ்ணோ: ப்ரகீர்த்தித: ।
வைகானஸம் பாஞ்சராத்ரம் வைதிகம் தாந்த்ரிகம் க்ரமாத் ॥

ஐஹிகாமுஷ்மிகபலம் வேத வைதிக வர்த்தனம் ।
பூஜயேத்வைதிகேனைவ க்ராமாதிஷு ச வாஸ்துஷு ॥

நதீ தீரேऽத்ரிச்ருங்கே வா வனே வா யத்ர நிர்ஜனே ।
காரயேத் தாந்த்ரி கேனைவ க்ராமாதௌ ந கதாசன ॥

பாஞ்சராத்ர விதானஸ்ய மந்த்ராச்சக்ர ஸமுத்ருதா: ।
பீஜாக்ஷர ஸமுத்பூதாச்சாஸ்த்ர த்ரஷ்டாச்ச கேசன ॥

முத்ராமண்டல ஷட்பேர தீக்ஷாபுத்ரத்வ ஸம்யுதம் ।
சதுர்வ்யூஹம் ததாக்னேயம் கேவலாமுஷ்மிகப்ரதம் ॥

ஸகாமானாம்ஸமுசிதம் ஸம்ஸாராச்ரமிணாமிதம் ।
ப்ரபஞ்சிதம் பகவதா பாஞ்சராத்ரமனேகதா ॥

ஜனயுக்தேஷு ஸர்வத்ர க்ராமாதிஷு ச வாஸ்துஷு ।
நாராயணம்தம் தேவேசம் பாஞ்சராத்ரேண வார்ச்சயேத் ॥

ப்ரதமம் பரம்மராத்ரம் ஸ்யாத் த்விதீயம் ருத்ரராத்ரகம் ।
த்ருதீயமிந்த்ர ராத்ரம் ஸ்யாத் சதுர்த்தம் க்ரஹராத்ரகம் ॥

பஞ்சமம் முனிராத்ரம் ஸ்யாத் பாஞ்சராத்ரமிதி ஸ்ம்ருதம் ।

வைகானஸ விதானஸ்ய மந்த்ரா: ச்ருதி ஸமுத்பவா: ।
ஸூத்ர மூலமிதம் சாஸ்த்ரமார்ஷேயமிதி விஸ்த்ருதம் ॥

பஞ்சவ்யூஹம் பஞ்சபேரம் பஞ்சமூர்த்தி ஸமன்விதம் ।
யஜமானரித்விகாசார்ய யுக்தம் யாக்ஞிக கர்மவத் ॥

சாதுர்வர்ண ஸம்ருத்யர்த்தம் சதுராச்ரம ஸித்திதம் ।
தர்மார்த்த காமமோக்ஷாணாம் சாதுர்வர்ணஸ்ய ஸாதகம் ॥

ஸகாமானாமகாமானாம்ஸம்ஸாராச்ரமிணாமபி ।
பக்திமுக்திப்ரதம் தஸ்மாத் ச்ரேஷ்டம் வைகானஸம் ஸ்ம்ருதம் ॥

இப்படி ச்ரேஷ்ட்டமான ஸ்ரீவைகானஸ சாஸ்த்ர அவதாரம் எப்படி என்றால்...

வைகானஸாக்யம் ஸ்ரீசாஸ்த்ரம் ஸார்த்தகோடி ப்ரமாணகம் ।
அபீதம்ஹி சதுர்ப்பிஸ்து முனிபி: காச்யபாதிபி: ॥ என்றும்-

வைகானஸ விதானஸ்ய சத்வாரோஹி ப்ரவர்த்தகா: ।
காச்போத்ரி மரீசிச்ச ப்ருகுச்சைவ முனீச்வரா: ॥

சதுர்பிர்முனிபி: ப்ரோக்தா சத்வாரோ விதயாச்சுபா: ।
சாதுர்லக்ஷ ப்ரமாணேன பூபரீக்ஷாதி கர்மணாம் ॥ இதிமரீசி: ॥

ஜயாநந்தம் ச ஸம்ஞா ச வீரஞ்ச விஜயம் ததா ।
விஜிதம் விமலம் க்ஞேயம் மரீசிஸ்ஸம்ஹிதாஷ்டகம் ॥

சதுராசீதி ஸாஹஸ்ரம் லக்ஷோபரி விதுர்புதா: ।
கிலம் கிலாதிகாரம் ச பூர்வதந்த்ர மத: பரம் ॥

வாஸாதி கரணஞ்சைவ அர்ச்சாதிகரணம் ததா ।
மானாதிகரணஞ்சைவ க்ரியாதிகரணம் ததா ॥

சித்ராதி கரணஞ்சைவ வர்ணாதி கரணாஹ்வயம் ।
நிருக்தஞ்ச ப்ரகீர்ணஞ்ச யக்ஞாதிகரணம் ப்ருகு: ॥

க்ரந்தஸங்க்யா க்ரமஞ்சைவ சதுஷ்சஷ்டி ஸஹஸ்ரகம் ।
பூர்வதந்த்ரமதாத்ரேயம் விஷ்ணுதந்த்ரம் யதாத்ரிணா ॥

உத்தராக்யஞ்ச தந்த்ரந்து ப்ரோக்தம் தந்த்ர சதுஷ்டயம் ।
அஷ்டாசீதி ஸஹஸ்ராணி க்ரந்த ஸங்க்யாத்ரிணோச்யதே ॥

ஸத்யகாண்டம் தர்க்ககாண்டம் ஞான காண்டந்து காச்யபம் ।
சதுஷ்ஷோடச ஸாஹஸ்ரம் க்ரந்தம்ப்ரோ வாச காச்யப: ॥

ஏஷாம்சதுர்விதானாம்து மூலம் தத்ஸூத்ரமுச்யதே ॥

ஏதத் சாஸ்த்ர அதிகாரிகளாய் இருக்கிற வைகானஸருடைய மாஹாத்ம்யம் எப்படி என்றால் ....

ததோருணா: கேதவோ வாதரஸனா: । ர்ருஷய உததிஷ்ட்டன் ।
யேநகா: தே வைகானஸா: யேவாலா: தே வாலகில்யா: ॥ என்றும்

விகனா இதி சப்ரோக்தா மனஸ: கனனாத்ஸ்துத: ।
ப்ரம்மணஸ்ஸவிசேஷேண முனீனாம் ப்ரதமோமுனி: ॥ என்றும்

"நகலுகோபிகா நந்தனோபவ । அகில தேஹினாம் அந்தராத்ம தருத் ।
விகனஸார்த்திதோ விச்வகுப்தயே, ஸக உதேயிவான் ஸாத்வதாம் குலே ॥ என்றும்

"ஆத்மயோனிஸ் ஸ்வயம் ஜாதோ வைகானஸ்ஸாமகாயன: । என்றும்

அச்வத்த: கபிலாகாவ: துளஸீவிகனா முனி: ।
சத்வாரோ மத்ப்ரியாராஜன் தேஷாம் வைகானஸோவர: ॥

வைகானஸம் பூர்வேऽஹன் தத்ஸாமபவதி । தேனுர்வஹானாமதிதி: ஸூராணாம் ப்ரம்மா
ர்ருபூணாம் விகனோ முனீனாம் என்றும் -

மத்பக்தா மத்கதப்ராணா மயிஸங்கத மானஸ: ।
அனன்ய சரணாராஜன் தஸ்மாத்வைகானஸோவர: ॥

ர்ரிஷீணாம் விகனாச்ரேஷ்ட்டோ வைகானஸ மதேஸ்தித: ।
விஷ்ணோராராதனே முக்யோ விப்ரோ வைகானஸோவர: ॥

ஸ்ரஷ்டும் ஸது ஸமுத்யுக்தோ ப்ரம்மாயோऽநியம:ப்ரபு: ।
கனித்வாசாத்மனாத்மானம் த்தாதி குணஸம்யுதம் ॥

த்யானமாவிச்ய யோகேனஹ்யாஸீத் விகனஸோ முனி: ।
க்ருஹே தேவாலயே வாऽபி பக்த்யா நாராயணம் ப்ரபும் ॥

ஸாயம் ப்ராதச்ச ஹோமாந்தே வைதிகேனார்ச்சயேத்புத: ।
வேதாந்த வேதிபிர்விப்ரை: தத்வைகானஸ ஸூத்ரிபி: ॥

யாஜயேத் யக்ஞபுருஷம் விஷ்ணும்ராஜா ஜகத்தித: ।
ஆத்மாவை புத்ர நாமாஸி விஷ்ணோர் விச்வகுடும்பின: ॥

வைகானஸாஹ்யௌரஸாச்ச தத்தபுத்ராச்ச தீக்ஷிதா: ।
விஷ்ணோர் வைகானஸஸ்யாபி பித்ரு புத்ரவதாசரேத் ॥

புத்ர ஏவ பிது: கார்யம் ஸ்வபாவாதேவ குர்வதி ।
பித்ரோர் யத்வஸ்து ஜாதம் தத்புத்ராய பவிஷ்யதி ॥

வைகானஸாஹி மத்புத்ரா: போக்தாரோமாமகம் தனம் ।
ஏதத்திவசனம்விஷ்ணோ: ச்ருணுத்வம் முனிஸத்தமா: ॥

தத்த்ரவ்ய க்ஷேத்ர பிம்பாணி ஸாலயா நியதா பதி ।
விகீர்ணனாதி கார்யேஷூ நாஸ்திதோஷோ மமாக்ஞயா ॥ என்றும்

ஏஷாம் தத்தம் ப்ரதிஷ்ட்டாந்தே ஜலதான புரஸ்ஸரம் ।
ஸபூமிம் ஸாலயம் பிம்பம் தேஷாம் வ்ருத்திம் நதோஷக்ருத் ॥

வைகானஸானாம் ஸர்வேஷாம் கர்பவைஷ்ணவ ஜன்மனாம் ।
நாராயணஸ்வயம் ஸாக்ஷாந்முத்ராம் தாரயதே நிஜாம் ॥

வைகானஸா மம ஸுதா தானாச்சான்யா மஹீதலே ।
மத்புத்ரானம் ந சிஹ்ணானி தாஸாச்சின்ன ஸமன்விதா: ॥

வைகானஸேன ஸூத்ரேண நிஷேகாதிக்ரியான்வித: ।
க்ருஹஸ்தோப்ரம்மசாரிவா பக்த்யாவார்ச்சனமாரபேத் ॥

அத்யாத்ம குணஸம்யுக்தோ யோகஜ்ஞோ பக்திமான்சுசி: ।
அர்ச்சகஸ் ஸுப்ரஸன்னாத்மா ஹரிரேவநஸம்சய: ॥

இப்படி சொல்லப்பட்ட ஸ்ரீவைகானஸராலே அர்ச்சிதராய் எழுந்தருளி இருக்கின்ற தேவரீர் திவ்ய மஹோத்ஸவ யாகமென்றொரு ஸங்கல்பத்தைப் பண்ணியருளி, ஸமஸ்த தேவைஸ்ஸஹ தேவரீரும் நாச்சிமாரும் ஸமஸ்த பக்த ஜனங்களோடு கூட அங்குரார்ப்பணமாரப்ய அவப்ருதாந்தம் திவ்யமஹோத்ஸவம் கண்டருளியபடி.

ஹம்ஸோம்ருகேந்த்ரோஹனூமான் பணீந்த்ரோபக்ஷிராட்ததா ।
தந்தாவளோரதச்சாச்வ: புஷ்பமண்டபமேவச ॥

ப்ரதமேஹனி பூர்வாஹ்னே பக்தைர் தேவ்யாதிபிஸ்ஸஹ ।
பத்வாப்ரதிஸரம் தேவம் முக்தாதாம விபூஷிதம் ॥

ஹம்ஸவாஹனமாஸீனம் ததாஸாயே ஜகத்பதிம் । என்கிறபடியே ப்ரதம தினம் தேவரீரும் நாச்சிமாரும், திருக்கொப்பு நானும் சாத்தியருளி, த்வஜாரோஹணம் கண்டருளி, பராத:காலோ த்ஸவம் கண்டருளி, ராத்ரி ஹம்ஸவாஹனத்தின் மேலேறியருளி திருவீதியில் எழுந்தருளித்தும்.

த்விதீயே திவஸே ப்ராதச் சக்ராத்யை: ப்ராதருத்ஸவம் ।
ஸிம்ம வாஹனமாஸீனம் ததாஸாயேஜகத்ப்ரபும் ॥

என்கிறபடியே - த்விதீயதினம் தேவரீரும் நாச்சிமாரும் ப்ராத:காலோத்ஸவம் கண்டருளி, ராத்ரி ஸிம்ம வாஹனத்தின் மேலேறியருளி திருவீதி எழுந்தருளித்தும்.

த்ருதீயே திவஸே ப்ராப்தே சக்ராத்யை:ப்ராதருத்ஸவம் ।
கபிராஜஸ்திதம் தேவம் ததாஸாயே ஜகத்ப்ரபும் ॥

என்கிறபடியே த்ருதீயதினம் தேவரீரும் நாச்சிமாரும் ப்ராத:காலோத்ஸவம் கண்டருளி; ராத்ரி சிறிய திருவடியின் மேலேறியருளி திருவீதியில் எழுந்தருளித்தும்.

சதுர்த்தே திவஸேப்ராப்தே சக்ராத்யை: ப்ராதருத்ஸவம் ।
அனந்தபீடமாஸீனம் ததாஸாயே ஜகத் குரும் ॥

என்கிறபடியே சதுர்த்த தினம் தேவரீர் நாச்சிமாருடனும் ப்ராத:காலோத்ஸவம் கண்டருளி; ராத்ரி முக்தாதாம விபூஷிதராய் ஸர்வ ஜனங்களுக்கும் மனோரதமான திருஅனந்தாழ்வான் மேலேறியருளி திருவீதி எழுந்தருளித்தும்.

பஞ்சமே திவஸே ப்ராப்தே ப்ராப்யம் ஸ்த்ரீரூபமுத்தமம் ।
பக்ஷிராஜஸ்திதம் தேவம் ததாஸாயே ஜகத்ப்ரபும் ॥

என்கிறபடியே பஞ்சமதினம் தேவரீர் ஜகன்மோஹனார்த்தமாக ஸ்த்ரீரூபமாய் திருஅவதாரம் செய்தருளி ப்ராத:காலோத்ஸவம் கண்டருளி; ராத்ரி ஆச்ரிதரளவில் பக்ஷபாதம் தோன்றுகைக்காக கருடன் மேலேறி பெரியபெருமாளென்கிற திருநாமத்தை ப்ரகாசிப்பிக்க வேண்டி மஹாமேருவின் மேலேறி ஒரு காளமேகம் பதிந்தாப்போலே பெரியதிருவடியின் மேலேறியருளி திருவீதி எழுந்தருளித்தும்.

ஷஷ்டேஹனி ச பூர்வாஹ்னே தேவம் தேவீஸமாயுதம் ।
ஹரித்ரா சூர்ண ஸ்நபனம் வஸந்தோத்ஸவமாசரேத் ॥

இச்சாமோஹி மஹாபாஹும் ரகுவீரம் மஹாபலம் ।
கஜேன மஹதாயாந்தம் ராமம் சத்ராவ்ருதானனம் ॥

என்கிறபடியே- ஷஷ்டதினம் தேவரீரும் நாச்சிமாரும் அனந்தகருட விஷ்வக்ஸேனாதிகளுடன் கூட மத்யான்ன காலத்திலே சூர்ணாபிஷேகம் கண்டருளி, வஸந்தோத்ஸவம் கண்டருளி, ராத்ரி ஆனைநம்பிரான் மேலேறியருளி திருவீதி எழுந்தருளித்தும்.

ஸப்தமே திவஸே ப்ராப்தே, விமான ஸத்ருசே ரதே ।
நானாவஸ்த்ர ஸமாகீர்ணே புஷ்பதாம விராஜிதே ॥

நானாரத்ன ப்ரவாளாதி முக்தா தாம விபூஷிதே ।
ரதரங்கே ச டோலாயாம் ஸ்ரீபூமீஸஹிதம் ஸ்திதம் ॥

டோலாயமானம் கோவிந்தம் மஞ்சஸ்தம் மதுஸூதனம் ।
ரதஸ்தம் கேசவம் த்ருஷ்ட்வா புனர்ஜன்ம நவித்யதே ॥

என்கிறபடியே- ஸப்தம தினம் தேவரீரும் நாச்சிமாரும் க்ஷௌமாம்பர புஷ்பதாம மௌத்திக ரத்னாதிகளினாலே அலங்க்ருதமான திவ்யரதத்தின் மேலேறியருளி திருவீதி எழுந்தருளித்தும்.

வீத்யாம் வீத்யாம் விசேஷைஸ்துரகததனுயைர் மண்டலைர் மண்டலாபா ।
ஸவ்யாஸவ்ய ப்ரசாரை: பதிஷூபஹுசரன் ஸஞ்சரன்னந்தரிக்ஷே ॥

பூம்னாபூமௌ கதாசித்திவிச ஜனவசாதாஜவாபாதிரேகா ।
வாஜீராஜீவநேத்ர த்ரிதசஹயமயீரக்ஷது க்ஷமாதளம் தே ॥

என்கிறபடியே-அஷ்டமதினம் தேவரீர் உலகிலொரு குதிரைச் சேவகனாய், தேவராகு உத்தராயனென்கிற திருநாமத்தைப் ப்ரகாசிப்பிக்க வேண்டி; பூம்யந்தரிக்ஷ ஸ்வர்கங்களிலும் வாயுவேக மனோவேகமான குதிரை நம்பிரான் மேலேறியருளி திருவீதி எழுந்தருளி, வேடுபறியும் கண்டருளி, பிறகு தேவரீரும் நாச்சிமாரும் பஞ்சசயனத்தின் மேலே பள்ளி கொண்டருளித்தும்.

அந்தர்மீலித ஸ்ருக்கலாப களிதம் தம்மில்ல பாரம்வஹன்
நித்ராத்யாக கஷாயிதாக்ஷியுகளம் ஸங்கோர்ணயன் மாதவ: ।
அக்ரந்யஸ்த நிசாத கண்டலதிகாமாந்தோளிகாமாச்ரய:
பரத்யூஷே புரசோதனாய வரதோ வீதீஷுவித்யோததே ॥

நவமேஹனி ஸம்பராப்தே நகர்யா ச்சேதனம் சரேத் ।
தேவதேவ்யோர் விவாதஞ்ச க்ருத்வா ஸந்தானமாசரேத் ॥

என்கிறபடியே-நவமதினம் தேவரீர் திவ்யாந்தப்புரத்தில் நாச்சிமாருடைய ஹ்ருதயத்தை விப்ரமை பண்ணி அபராத்ரியிலே டோலாயித சித்தனாய் நின்நட மடவாரிடத்திலே நின்றும் திருவந்தாலெழுந்தருளி, திருவாமோதிரம் தேடியருளி, தேவீவிவாதோத்ஸவம் கண்டருளிப் பின்பு அவப்ருத ஸ்நானமும் கண்டருளி ஸமஸ்த தேவதைகளுக்கும், ஸப்த ரிஷிகளுக்கும், ஸமஸ்த யதிகளுக்கும், ஸமஸ்த பக்தஜனங்களுக்கும், ஸமஸ்த பாகவத ஜனங்களுக்கும், தீர்த்தம் ப்ரஸாதித்தருளியும்; ஸாயங்காலத்திலே இந்திர விமானத்தின் மேலேறியருளி திருவீதி எழுந்தருளியும் பின்பு த்வஜ அவரோஹணம் கண்டருளித்தும்.

புஷ்பயாகேன சாம்யந்தி தோஷாச்சோத்பவஸம்பவா: ।
வத்ஸராsக்ஞாத தோஷாச்ச மார்க்கசீர்ஷார்ச்சனேனவை ॥

என்கிறபடியே- தேவரீர் ஸம்வத்ஸர ப்ராயச்சித்தமாக த்வாதச திருவாராதனத்தையும் ஸமாராதனையும் கண்டருளியிருக்கிற தேவரீர் ப்ரம்மா முதலான ஸமஸ்த தேவதைகளுக்கும் விடை கொடுப்பதாக மஹாமேருவுக்கு ஒப்பென்னலாம்படி தேவரீர் நின்ற நிலை.

ஏவம் ய:குருதே பக்த்யா விஷ்ணோருத்ஸவமுத்தமம் ।
ஸர்வான் காமானவாப்யைவ விஷ்ணுலோகம் ஸகச்சதி ॥

என்கிறபடியே- தேவரீருக்கு இந்த திவ்ய மஹோத்ஸவம் செய்வித்த பக்தனானவன், இந்தபடியே நித்யோத்ஸவம் பண்ணிக்கொண்டு நித்யராகும்படித் திருவுள்ளம் பத்தியருளவும். (ஸகல வாத்தியம் வாசிக்க வேண்டும்.)

ப்ரம்மாவிற்கு விடை சாதிப்பது

ஆகதஸ்ஸேவிதும்ரம்யம் தவதிவ்ய மஹோத்ஸவம் ।
க்ருதாஞ்ஜலிபுடோமௌலௌ வர்த்ததேசதுரானன ॥

என்கிறபடியே- தேவரீருடைய திவ்யமஹோத்ஸவ ஸேவார்த்த நிமித்தமாக ப்ரம்மா ஹம்ஸவாகனராய் கமண்டலு த்ருதாக்ஷ ஹஸ்தராய் ஸாவித்ரீ, காயத்ரீ, ஸஹிதராய் ஹம்ஸத்வஜராய் வந்து ஸேவித்து நின்றார். அவர் தம்முடைய ஸ்வர்கலோகமே விடைகொள்ளும்படி திருவுள்ளம் பத்தியருளவும். (ஸகல வாத்தியம் வாசிக்க வேண்டும்.)

॥ இந்திரன் ॥

சச்யா ஸமாகதோ தேவைர் வஜ்ரபாணி: புரந்தர: ।
ஐராவதமுபாரூட: ப்ராகாசா நாயகோ ஹரே: ॥

என்கிறபடியே- தேவரீருடைய திவ்யமஹோத்ஸவ ஸேவார்த்த நிமித்தமாக இந்தரன் ஐராவதாரூடராய் வஜ்ரஹஸ்தராய் உபேந்த்ர இந்த்ராதி ஸஹிதராய், அசனித்வஜராய் ரம்பை முதலான அப்ஸரஸ்த்ரீகளோடுகூட வந்து ஸேவித்து நின்றார். அவர் தம்முடைய ஸ்வர்கலோகமே விடைகொள்ளும்படி திருவுள்ளம் பத்தியருளவும். (ஸகல வாத்தியம்)

|| *அக்னி* ||

அக்னிர்க்ர்யஸ் ஸமாதாய ஸ்வகணைரஜவாஹனம் |
ஸ்வாஹாஸ்வதாப்யாமாருஹ்ய ப்ராச்யவாக்ஸந்திநாயக: ||

என்கிறபடியே- தேவரீர் திவ்யமஹோத்ஸவ ஸேவார்த்தநிமித்தமாக அக்னி அஜவாகனராய் - ஸ்ருக் ஸ்ருவ கமண்டலு ஜுஹூபஜுஹூ ஹஸ்தராய், ஸ்வாஹா ஸ்வதா தேவி ஸஹிதராய், வானரத்வஜராய் வந்து ஸேவித்து நின்றார். அவர் தம்முடைய அக்னி லோகமே விடைகொள்ளும்படி திருவுள்ளம் பத்தியருளவும். (ஸகல வாத்தியம்)

|| *யமன்* ||

தக்ஷிணாசாபதி: காலச்சுகாங்க்யாஸஹ ஸேவதே |
த்வதுத்ஸவம் ஸாதரேண ஸ்வகணை: பரிவாரித: ||

என்கிறபடியே- தேவரீருடைய திவ்ய மஹோத்ஸவ ஸேவார்த்த நிமித்தமாக யமன் மஹிஷவாகனராய், சுகர்கீ தேவீ ஸஹிதராய், வ்யாளத்வஜராய், சித்ரகுப்தாத்யகில படைகளோடு கூட வந்து ஸேவித்து நின்றார். அவர் தம்முடைய யமலோகமே விடைகொள்ளும்படி திருவுள்ளம் பத்தியருளவும். (ஸகல வாத்தியம்)

|| *நிர்ருதி* ||

தக்ஷிணாபரஸந்தீசோ நிர்ருதிர் நரவாஹன: |
நிரந்தரம் பவத்ஸேவாம் கரோதி கருணாநிதே ||

என்கிறபடியே-தேவரீருடைய திவ்ய மஹோத்ஸவ ஸேவார்த்த நிமித்தமாக நிர்ருதி நரவாகனராய்,த்ரிசூல ஹஸ்தராய், ஸம்மோதினீ தேவி ஸஹிதராய், க்ருகலாஸ த்வஜராய் வந்து ஸேவித்து நின்றார். அவர் தம்முடைய நிர்ருதி லோகமே விடைகொள்ளும்படி திருவுள்ளம் பத்தியருளவும். (ஸகல வாத்தியம்)

|| *வருணன்* ||

பச்சிமாசாபதி: பாசயாதோகண ஸமாவ்ருத: |
வருணஸ்ஸததம் ஸேவாம் ஸம்யகாசரதிஸ்வயம் ||

என்கிறபடியே- தேவரீருடைய திவ்யமஹோத்ஸவ ஸேவார்த்த நிமித்தமாக வருணன் மகர மத்ஸ்ய வாகனராய், தன்னுடைய ஜலஜந்துக்களோடு கூட வந்து ஸேவித்து நின்றார். அவர் தம்முடைய வருணலோகமே விடைகொள்ளும்படி திருவுள்ளம் பத்தியருளவும். (ஸகல வாத்தியம்)

|| *வாயு* ||

பவன ப்ராணினாம் ப்ராண: பச்சிமோத்தரஸந்திராட் |
ஸகனஸ்த்வா முபாஸ்தேஸௌ ப்ரணிபத்ய முஹுர்முஹு: ||

என்கிறபடியே- தேவரீருடைய திவ்யமஹோத்ஸவ ஸேவார்த்த நிமித்தமாக வாயு க்ருஷ்ணஸார வாகனராய், கட்கஹஸ்தராய், குமுத்வதிதேவீ ஸஹிதராய், வம்சயஷ்டி த்வஜராய்,வஸந்தாதி ஷட்ருதுக்களோடு கூட வந்து ஸேவித்து நின்றார். அவர் தம் வாயு லோகமே விடைகொள்ளும்படி திருவுள்ளம் பத்தியருளவும். (ஸகல வாத்தியம்)

|| குபேரன் ||

ராஜராஜோ தனாத்யக்ஷ: குபேர: குருதேநிசம் ।
நமஸ்க்ரியாம் கின்னரேசோ நிதிபிஸ்ஸமுபாஸித: ॥

என்கிறபடியே- தேவரீருடைய திவ்யமஹோத்ஸவ ஸேவார்த்த நிமித்தமாக குபேரன் புஷ்பகரதாரூடராய் த்ர்யங்கரி தண்டஹஸ்தராய், யவன கலாதேவீ ஸஹிதராய், ஸிம்மத்வஜராய், ஸங்கநிதி, பத்மநிதி முதலான நவநிதிகளோடுகூட வந்து ஸேவித்து நின்றார். அவர் தம்முடைய அளகாபுரியே விடைகொள்ளும்படி திருவுள்ளம் பத்தியருளவும். (ஸகல வாத்தியம்)

|| *ஈசானன்* ||

ஸேவார்த்தமாகதச்சூலீ ப்ராகுதக்ஸந்திநாயக: ।
த்வன்னாம ஸ்மரணம் குர்வன் உமயா ஸஹஸேவதே ॥

என்கிறபடியே- தேவரீருடைய திவ்யமஹோத்ஸவ ஸேவார்த்த நிமித்தமாக ருத்ரன் வ்ருஷப வாகனராய் த்ரினேத்ர த்ரிசூல டமருக ஹஸ்தராய், பார்வதீ தேவி ஸஹிதராய், வ்ருஷபத்வஜராய் விநாயக ஸுப்ரமண்யாதி ப்ரதம கனைஸ்ஸஹ வந்து ஸேவித்து நின்றார். அவர் தம்முடைய கைலாஸமே விடைகொள்ளும்படி திருவுள்ளம் பத்தியருளவும். (ஸகல வாத்தியம்)

வஸிஷ்டப்ருக்வத்ரிமுனி ப்ரவீராஸ்த்வன்யேபி லோகாந்தர வாஸிநோயே ।
ஸமாகதாஸ்த்வத்பதஸேவயாதே க்ருதார்த்ததாமேத்ய நமஸ்க்ரியந்தே ॥

என்கிறபடியே- தேவரீருடைய திவ்யமஹோத்ஸவ ஸேவார்த்த நிமித்தமாக வஸிஷ்டர் முதலான ப்ரம்மரிஷிகளும் மற்றுமுண்டான; பூம்யந்தரிக்ஷ ஸ்வர்க்கங்களிலும் உண்டான ஸமஸ்த தேவதைகளும் யக்ஷராக்ஷஸகின்னர கிம்புருஷ கருட கந்தர்வ ஸித்தவித்யாதராதிகளும் ஸனக, ஸனாதன, ஸநந்தன, ஸனத்குமாராதிகளும் ஸ்ரீவைகானஸ வாலகில்யாதிகளும், ப்ரஹ்லாத, நாரத பராசர, புண்டரீகாதிகளும், ஸப்த ரிஷிகளும், அஷ்ட வஸுக்களும், நவக்ரஹங்களும், ஏகாதச ருத்ராதிகளும், த்வாதச ஆதித்யர்களும், முப்பத்து முக்கோடி தேவர்களும், நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகளும், வர்ண வாகன தேவீ பூஷணாயுதைஸ்ஸஹ த்வஜாரோஹணாத்யவரோஹணான்வித ஸ்ரீபுஷ்பயாகாந்தம் தேவரீருடைய கோடி கந்தர்ப்ப லாவண்ய ஜகன்மோஹன திவ்யமங்கள விக்ரஹத்தில் ஈடுபட்டு வந்து ஸேவித்து நின்றார்கள். அவர்களெல்லோரும் தம் தம் லோகமே விடைகொள்ளும்படி திருவுள்ளம் பத்தியருளவும். (ஸகல வாத்தியம்)

ஏதான்ஸமஸ்தான் ஸுரலோகப்ருந்தான்
அன்யான்முனீன் திவ்யமஹோத்ஸவாகதான் ।

ப்ரஸ்தாபய ப்ரேம கடாக்ஷ பாதை:
விபோயதாஸ்தான மனாதிமூர்த்தே ||

என்கிறபடியே- தேவரீருடைய திவ்யமஹோத்ஸவ ஸேவார்த்த நிமித்தமாக மற்றுமுண்டான லோகாலோகத்திலுள்ள ஸமஸ்த பக்த ஜனங்களும், தேச விதேசத்திலிருந்தும் வந்த ஸமஸ்த பாகவத ஜனங்களும்,ப்ரம்ம க்ஷத்ரிய வைச்ய சூத்ராதியர்களும் ஸமஸ்த ப்ராணிகளும் தேவரீருடைய திவ்யமங்கள விக்ரஹத்திலே ஈடுபட்டு வந்து ஸேவித்து நின்றார்கள். அவர்கள் எல்லோரும் இந்தத் திருநாளுடைய தீர்த்த பலத்தையும், ஸேவா பலத்தையும் அடைந்து தான் தான் தேசமே விடைகொள்ளும்படி திருவுள்ளம் பத்தியருளவும். (ஸகல வாத்தியம்)

|| *பகவத்வாக்யம்* ||

ப்ரம்மன் ப்ரயாஹி ஸ்வகணை: ஸ்வலோகம்
கச்சேச கைலாஸ உமாஸமேதம் |
இந்த்ராதயோயூயமித: ப்ரயாதம்
யதாஸ்பதம் தேவகணைருபேதம் ||

ஸுத்ருப்த்தா பலிபுஷ்பாத்யை: உத்ஸவார்த்தமிஹாகதா: |
யூயம் யதேஷ்டம் கச்சந்து புனராகமனாயச ||

என்கிறபடியே- தேவரீர் திருநாளென்று ஒரு வ்யாஜத்தை இட்டு ஸகலஜன மனோ நயனங்களையும் வசீகரியா நின்றுகொண்டு, ஸ்ரீவைகானஸ விதானத்தினால், த்வஜாரோஹணாத்யவரோஹண பர்யந்தம் தேவரீரும் நாச்சிமாரும், ஒருநாள் சாத்தியருளின சாத்துபடி மறுநாள் சாத்தியருளாதபடியினாலும், தேவரீருடைய திவ்ய ஸௌந்தர்யங்களைக் கண்டு, ஒருநாள் எழுந்தருளின வாகனம் மறுநாள் எழுந்தருளாதபடியினாலும் தேவரீர் தேவர்களுக்கும், தேவனானபடியினாலே தேவரீருடைய வாகனாதிகளையும் ஸேவித்துக்கொண்டு, புத்ர மித்ர களத்ராதிகளுடன்கூட ஸமஸ்த ப்ராணிகளும் வந்து ஸேவித்து நின்றார்கள். அவர்கள் எல்லோரும் இந்தத் திருநாளை யாசித்து திருநாளுக்கு ஸேவிக்க வாருங்கோளென்று பெருமாள் நாச்சிமாருடன் கூட அருளிச் செய்தார். (ஸகல வாத்தியம்)

உத்வாஸன ப்ரபந்த: ஸமாப்த: ||

யதக்ஷர பதப்ரஷ்டம் மாத்ராஹீனந்த்து யத்பவேத் |
தத்ஸர்வம் க்ஷம்யதாம் தேவ நாராயண நமோஸ்துதே ||

லக்ஷ்மீவல்லப ஸங்கல்ப வல்லபாய மஹாத்மனே |
ஸ்ரீமத்விகனஸேபூயாத் நித்ய ஸ்ரீர்நித்ய மங்களம் ||

மங்களானி பவந்து

ஓம் தத்ஸத்

# எளிமையான சந்தஸ்ஸில் இலக்கண சாஸ்திரம்

முனைவர் **ஆ.வீரராகவன்,** M.A., B.L.I.S., Ph.D.,
சம்ஸ்கிருதப் பண்டிதர்,
சரசுவதி மகால் நூலகம்,
தஞ்சாவூர்.

**அருள் மணங்கமழும் இராமாயணத்தின் அறியபெருமைகளை அறியாதார் இவ்வையகத்தினில் யாருமிலர். அவ்வாதிகாவியத்தின் அடிப்படையில் ரகுவம்சம், மகாவீர சரிதம், ரகுவீரகத்யம் போன்ற பல்வேறு வகை இலக்கியங்கள் எழுந்துள்ளன. இருப்பினும் ஒரு இராம பக்தர் தனது பக்தியின் வெளிப்பாட்டால் இராமபிரானையே கருப்பொருளாக்கி அரியதொரு நூலாக இலக்கணக் கருத்துக்ளை எடுத்தியம்பும் படியாய் எளிய நடையில் யாவரும் அறியும் வண்ணம் இலக்கண நூலொன்றைச் சமைத்துள்ளார். அற்புதமான அவ்விலக்கண நூலின் பெயரே பிரபோத சந்திரிகை என்பதாகும்.**

**பிரபோதம், சந்திரிகை என்ற இரு சொற்களைப் பெற்றிருக்கிறது இந்நூல். பிரபோதம் என்பது எழுச்சியுறச் செய்தலையும், சந்திரிகை என்ற சொல் திங்களின் ஒளியையும் குறிக்கின்றன. திங்களின் ஒளி யாவரது உள்ளத்திலும் மகிழ்ச்சியைத் தோற்றுவிப்பது போல வைஜலபூபதி சப்த சாஸ்திர செய்திகளைக்கொண்டு**

பாலகானாம் பிரபோதாய தோஷாய விதுஷாமபி ।
ஆகல்பமயி ஸம்ஸாரே கீர்த்தி ஸம்ஸ்தாபனாய ச ॥ 10

சிந்தயன்னிதி நிர்யாத: க்ரீடந்தம் ச்ரீஹிராதரம் ।
ச்ரீமான் வைஜலபூபால: விலோக்யேத்யப்ரவீத்சுதம் ॥ 11

வித்யயா த்யோததே ராஜ்யம் வித்யயா ஜீயதே ரிபு: ।
வித்யயா ஜாயதே க்ருத்யம் வித்யயா லபதே யச: ॥ 12[1]

**என்கிறபடியே மாணவர்கள் மற்றும் ஏனையோர் உள்ளத்திலும் எழுச்சியைத் தூண்ட நினைத்தார்.**

க்ரியாகாரகவிக்ஞானாத் நீதி: ஸம்யக் விதீயதே ।
ஸ்யாதி த்யாதி பரிக்ஞானாத் புத்தி ராஷ்ட்ரம் விவர்ததே ॥ 30

க்ரியாகாரக ஸம்பந்தஞானமுத்பாத்யதே யதா ।
உத்க்ருஷ்டா ப்ரக்ரியா ஸேயம் த்வயா ஸம்ப்ரதி பட்யதாம் ॥ 34

ப்ரபோதசந்த்ரிகா நாம ராமசந்த்ர ஸமாச்ரிதா ।
அக்ஞான திமிரத்வம்ஸகாரிணீ சித்தஹாரிணீ ॥[2] 35

**என்றவாறு இலக்கண சாஸ்திரத்தில் எழுச்சியினைப் பிறப்பிக்கும் இந்நூல் யாவரும் பெற்று பயனடையத் தக்கது.**

---

1. प्रबोधचन्द्रिका पृ. सं. - 6 & 7, **Tanjore SarasvatiMahal edn.**
2. ,, ,, 13 & 15 ,, ,,

வினா வ்யாகரணம் வாணீ ரமணீரமணம்விநா ।
விவேகம் ச வினா லக்ஷ்மீ: ந ஸுகாய கதாசன ॥ 31

தஸ்மாத் வ்யாகரணம் பூர்வம் பட த்வம் புத்திவ்ருத்தயே ।
பஸ்சாத் நீதிம் படித்வா த்வம் ராஜ்யம் பஜ யதாஸுகம் ॥[1] 32

என்ற பூர்வபீடிகை சுலோகங்களின் வாயிலாக இலக்கணமற்ற மொழியும் தலைவனை இழந்த தலைவியும் ஒரு போதும் விளங்குவதில்லை; நல்ல அறிவாற்றலுக்கு இலக்கண சாஸ்திரத்தின் பங்கு மிக முக்கியம் என்பதும், அரசர்களுக்கு நீதி சாஸ்திரத்தில் புலமையும், படைக்கலப் பயிற்சியும் தேவை என்கிறதும் புலனாகிறது. நீதி சாஸ்திரத்திற்குத் துணையாக இலக்கண சாஸ்திரமும் பயின்று பின்பு ஆட்சிப்பொறுப்பினை ஏற்றுக்கொள்ளக் கூறுவதாலே இந்நூல் விளையாட்டுப்பிள்ளையாய் உள்ள தன் மகன் உள்ளத்திலும் தூண்டுதலைத் தோற்றுவிக்க இயற்றப்பட்டதுமாகிறது.

இந்நூலின் ஆசிரியர் வைஜல தேசத்தின் மன்னராதலால் வைஜலதேவன், வைஜலேக்ஷாணிபாலன் என்றெல்லாம் அழைக்கப்படுகிறார். இவரது இயற்பெயர் படநாதிநாதர் என்பது. தாயார் சந்திராவதி அம்மையார். தந்தையார் விக்ரமாதித்யபூபன். சௌகான வம்சத்தில் தோன்றிய இந்நூலாசிரியர் திருமால், சிவபெருமான், குரு ஆகியோரிடத்திலும், சிறப்பாக ஸ்ரீ இராமபிரானிடத்திலும், மிகுந்த பக்தி கொண்டவர். அழகில் இவர் மன்மதன். எதிரிகளை வீழ்த்துவதில் எமன். இரப்பில் இவர் வள்ளல். நீதி முதலான சாஸ்திரப் புலமையும், எச்செயலையும் துணிந்து நிறைவேற்றும் ஆற்றலும் இவருக்கு உண்டு. இது.

ஹரிஹரகுருபக்தஸ்ஸர்வ லோகானுரக்த:
த்ரிபுவன கதகீர்த்தி: காந்திகந்தர்ப மூர்த்தி: ।
ரணரிபுகணகாலோ வைஜல க்ஷோணிபாலோ
ஜகதிஜயதி தாதா ஸர்வகர்மாவதாதா ॥[2] 1

சந்த்ராவதீ வதனசந்த்ர சகோர விக்ர-
மாதித்ய பூபதனயோ நயதந்த்ர வேத்தா ।
சௌகானவம்சதிலக: படநாதி நாதோ-
ராஜாபரம் ஜயதி வைஜலதேவ நாமா ॥[3] 2

ஸ்ரீமத் வைஜலதேவேன ராமபக்திரதாத்மனா ॥[4] 4a

எனவமைந்த சுலோகங்களால் தெளிவாகிறது. ஒரு சமயம் இவர் சீரிய சிந்தனையில் ஆழ்ந்து

அஸ்திவஜ்ரமயம் யஸ்ய யஸ்ய சர்ம ச வர்மவத் ।
ஸ ததீசி: ஸகர்ணோ வா நாதிஷ்ட்டச்சிரம் புவி ॥ 5

ந ஸம்ப்ரதி சரீராணி ந ராஜ்யானி தனானி ச ।
தேஷாம் ஸ்வர்ககதானாம் ஹி கீர்த்தி ஜாகர்தி பூதலே ॥ 6

பத்மினீ பத்ர ஜலவத் ஸம்ஸாரே ஸர்வமஸ்த்திரம் ।

1. प्रबोधचन्द्रिका पृ. सं. -13 & 14, Tanjore Sarasvati Mahal edn.
2. ,, ,, 1 ,, ,,
3. ,, ,, 2 ,, ,,
4. ,, ,, 3 ,, ,,

கீர்த்திரக்ஷரஸம்பத்தா ஸ்திரா பவதி பூதலே ॥ 7
இஹலோகே சுகம் யேன பரலோகேபி ஜாயதே ।
ததேவ ப்ரத்யஹம் கர்ம கர்த்தவ்யம் தூரதர்சினா ॥ 8
ஸம்ஸாராம்போதி தரணம் ராமநாமானுகீர்த்தனம் ।
ராமநாமான்விதா தஸ்மாத் ப்ரக்ரியா க்ரியதே மயா ॥[1] 9
பஹவ: ப்ரக்ரியா க்ரந்தா: ஸந்திசேத் ஸந்து கா க்ஷதி: ।
மாலதீ மதுர: க்வாபி மதுபானாம் லதாந்தரே ॥[2] 36

என்னும்படியாய் இவ்வுலகில் நிலையாப் பொருள்களையும், நிலைத்திருப்பன குறித்தும் அறிந்துணர்ந்து, இராம நாமமே தாரக மந்திரம் என்று முடிவுக்கு வந்து அதைக் கொண்டே இலக்கண சாஸ்திரமுரைக்கும் இவ்வெளிய செய்யுட் காப்பியத்தை இயற்ற முற்பட்டார்.

இலக்கண சாஸ்திரம் போதிக்கும் இவ்வெளிய நூலில் விபக்தி, காரகம், அனுக்தம், ஸமாஸம், தத்திதம், க்ருதந்தம் ஸந்தி போன்ற சந்திரிகைகள் உள்ளன. விபக்தி சந்திரிகையின் முதல் சுலோகமே விளி வேற்றுமையையும் சேர்த்து எட்டுவகை வேற்றுமைகளையும்

ராமே மேऽபிஹிதம் கரோது ஸததம் ராமம் பஜே ஸாதரம்
ராமேணாபஹ்ருதம் ஸமஸ்ததுரிதம் ராமாய தத்தம் தனு:
ராமான் முக்திரபீப்ஸிதா ஸரபஸம் ராமஸ்ய தாஸோஸ்ம்யஹம்
ராமே ரஞ்சது மே மன: கருணயா போ ராம மாம் பாலய ! ॥[3] 1

என்பதால் விளக்கவல்லதாய் அமைந்திருக்கின்றது. பிறகு தனித்தனியாக சொற்களும் வேற்றுமைகளும், வினைச்சொற்களின் பயன்பாடுகளும் விளக்கப்படுகின்றன. இனி நூலின்போக்கை உணரும் வண்ணம் ஓரிரு எடுத்துக்காட்டுகள் நூலிலிருந்தே எடுத்துக் கையாளப் படுகின்றன.

சீங், ஸ்த்தா, ஆஸ் முதலிய வினைச்சொற்களுடன் அதி என்னும் உபசர்கம் சேருகின்ற போழ்து ஆதாரத்தைக் குறிப்பிடும் சொல் ஏழாம் வேற்றுமையைத் தவிர்த்து இரண்டாம் வேற்றுமை பெறுவதனை "அதி சீங்ஸ்த்தாஸாம் கர்ம" என்ற இலக்கண சூத்திரத்தின் வழி ஏற்படும் நிகழ்வுகள்

சீங்ஸ்த்தாஸாமதி பூர்வாணாமாதார: கர்ம தத்யதா ।
அதிசேதே வனம் ராமே ஹ்யத்யாஸ்தே சாதிதிஷ்ட்டதி ॥[4] 19

என்ற அனுஷ்டுப் சுலோகத்தால் இராம நாமங்கொண்ட சொற்றொடரைக் கொண்டு இரண்டாம் வேற்றுமை உணர்த்தப்படுகிறது. இதனால் ராம: வனம் அதிதிஷ்ட்டதி, அத்யாஸ்தே, அதிசேதே என்ற எடுத்துக்காட்டுகளும், உபசர்கத்தின் தொடர்பற்ற நிலையில் ராம: வனே வஸதி, சேதே, திஷ்ட்டதி, ஆஸ்தே போன்ற உதாரணங்களும் காட்டப்படுகின்றன. இனி பிரபோதசந்திரிகையின் சுலோகங்களைச் சிறிது பார்ப்போம்.

---

1. प्रबोधचन्द्रिका पृ. सं. - 4-6, Tanjore Sarasvati Mahal edn.
2. ,, ,, 15 ,, ,,
3. ,, ,, 17 ,, ,,
4. ,, ,, 25 ,, ,,

அந்தரேணாந்தராயோகே த்விதீயா ஸ்யாத் வினாபி ச ।
ந முக்திர் ஜாயதே ராமம் அந்தரேணாத்மனா விநா ॥[1] 22

த்ருதீயா ஜாயதே ஹேதௌ ததேத்தம் பூதலக்ஷணே ।
ராமபக்த்யா பவேன் முக்தி: ராமஸ்சாபேன கானனே ॥[2] 28

சதுர்த்தீ கமனார்த்தஸ்ய தாதோ: கர்மணி வா யதா ।
ஜகாம ராமசந்த்ரோவஸௌ வனாய பிதுராக்ஞயா ॥[3] 31

நம: ஸ்வஸ்த்யாதி யோகே ச யதா ராமாய தே நம: ।
ஸ்வஸ்தி ராமாய தேவாய ஸ்வாஹா பித்ரே ஸ்வதா ஸதா ॥

ஸீதா விரஹகின்னோபி ராமோலம் ராவணாரயே ।
வஷடர்த்தே சதுர்த்தேவபி .................. ॥[4] 33&34 என்று

ஸமாஸப் பகுதியில் தத்புருஷன்-

பவேத் ஷஷ்டீ தத்புருஷோ ராமபக்தோ பவாம்யஹம் ॥[5] 17

தத்திதப் பகுதியில் மதுப்-

ததஸ்யாஸ்தீதி குணவான் ராமோ குணவதீ ப்ரியா ।
குணவத் ராகவகுலம் ஏவம் ஸர்வத்ர புத்யதாம் ॥[6] 2

அனுஸ்வார சந்தி (சந்திசந்திரிகையில்)

நகாரஸ்ய பதாந்தஸ்ய சகாரே பிந்து ஸம்யுத: ।
ச ச்சயோர் ஜாயதே நித்யம் கத்யந்தே ததுதாஹ்ருதி: ॥
சரீமாம்ஸ்ச்சரதி ராமோஉயம் பவாம்ஸ்ச்சாதயதி த்விஷ: ।[7] 41&42

என்பதாக எள்ளளவே இங்கு முயன்று காட்டப்பட்டிருக்கிறது. பொதுமக்களும் இலக்கணம் அறியவிழையும் ஆர்வலர்களும் குறிப்பாகச் சம்ஸ்கிருதம் பயிலும் மாணாக்கர்களும் பயன்படுத்தும் வகையில் இந்நூல் அமைந்து விளங்குகின்றது. இராமநாமத்தின் அடிப்படையில் இலங்குகின்ற எளிய இவ்விலக்கண சாஸ்திரத்தின் மூலப்பிரதியை இரண்டாம் சரபோஜி மன்னர், "ஸர்வ வித்யா கலாநிதி சாலை" எனும் "நவவித்யா கலாநிதி சாலை"யில் மாணாக்கர்களிடம் சம்ஸ்கிருத இலக்கணத்தின் இன்றியமையாமையைப் புகட்டவேண்டி1820 ADல் தாம் காசிப்பயணம் சென்று வருங்கால் காசியிலிருந்து விலை கொடுத்து வாங்கி வந்து இந்தச் சுவடி நூலை தஞ்சை சரபோஜியின் சரசுவதி மகால் நூலகத்தில் வைத்துப் பாதுகாத்தார் என்பது தெரியவருகிறது.

ஓர் அடிக்கு 8 எழுத்துகள் வீதம் நான்கடிகளுக்கு (4 x 8=)32 எழுத்துக்களை பெற்ற எளிமையான அனுஷ்டுப் சந்தஸ்ஸில் இலக்கண சாஸ்திரம் போதிக்கும் வழியைப் புகுத்திய பெருமையுடையவர் ஸ்ரீ வைஜலபூபதி என்றால் அது மிகையில்லை.

---

1. प्रबोधचन्द्रिका पृ. सं. – 27, **Tanjore Sarasvati Mahal edn.**
2. ,, ,, 31 ,, ,,
3. ,, ,, 33 ,, ,,
4. ,, ,, 34 ,, ,,
5. ,, ,, 136 ,, ,,
6. ,, ,, 148 ,, ,,
7. ,, ,, 230 ,, ,,

# சரசுவதி மகால் நூலகப் படைப்புகளில் தமிழ்மொழி பெயர்ப்புள்ள வடமொழி நூல்கள்

எல்.அனிதா, M.A.,
சம்ஸ்கிருதப் பண்டிதர்,
சரசுவதி மகால் நூலகம்,
தஞ்சாவூர்.

தஞ்சாவூர் சரசுவதி மகால் நூலக படைப்பான க்ஷத்ரசூடாமணி என்ற நூல் வாதீபசிம்மனால் இயற்றப்பட்டது. சமஸ்கிருதமொழிக் காவியமான க்ஷத்ரசூடாமணி தமிழ்மொழி பெயர்ப்புடன் கூடிய ஒரு அரிய சுவடியாகும்.

சமணத்துறவிகள் இந்திய இலக்கியங்கள் வளரக் காரணமாய் இருந்தனர். பிற்காலத்தில் தமிழில் தோன்றிய சீவகசிந்தாமாணி என்ற காப்பிய நூலுக்கு அடிப்படையாக இந்த காவியம் விளங்கியது என சைனர் கருதுவதாக தமிழ்த்தாத்தா உ. வே. சா. கூறியுள்ளார். இவர்கள் சமணமதம் சார்ந்த இலக்கியங்களை இயற்றினர். இவை துறவிகளுக்கு மட்டுமல்லாது. இல்லற வாழ்வில் ஈடுபடுவோருக்கும் அறத்தினை உரைப்பவை. ஊழ்வினையும் மறுபிறப்பும் மனிதப் பிறவியை அச்சுறுத்தும்போது ஒழுக்கமான வாழ்வே மனிதனை உயர்விக்கும். சமணமதத்தை ஒரு பண்பட்ட மதமாக நமக்கு காட்டுகிறது. ஈடுபாடுமிக்க அறம்பொருந்திய காவியத் தலைவர்கள் அவ்வறத்தைப் பின்பற்ற எத்துனைத் துயர்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. அறம் சார்ந்த கதைகள் வாயிலாக இன்று வெளிப்படுகின்றன.

க்ஷத்ரசூடாமணி இரண்டு பாகங்களைக் கொண்டுள்ளது. அதில் முதல்பாகத்தில் ஐந்து இலம்பகங்களைக் காணலாம். இரண்டாம் பாகத்தில் ஆறு முதல் பதினோரு இலம்பகங்கள் உள்ளன. ஜீவகன் க்ஷேமஸ்ரீ, கனகமாலா, விமலா, ஸுரமஞ்ஜரி, லக்ஷ்மணா ஆகிய பெண்களை மணந்து கடைசியில் துறவு மேற்கொண்டு ஜினதேவரின் வழியைப் பின்பற்றி வீடுபேறு அடையும் வரையிலான கதையினை இந்நூலின் இரண்டாம் பாகம் தெரிவிக்கின்றது. இச்சுவடி எழுதிய ஜைனர்கள் தமிழை எவ்வாறு கையாண்டார்கள் என்பதற்கு இது ஒரு சான்று நூலாகும்.

*காயத்ரீ கோசம்*

காயத்ரீ கோசம் என்ற பெயருக்குகேற்ப பல்வேறு வகையானத் தெய்வங்களைப் புகழ்ந்து பாடும் காயத்ரீ மந்திரங்களின் கருவூலமாகத் திகழ்கின்றது. காயத்ரீ என்றால் இருபத்துநான்கு எழுத்துக்களைப் பெற்ற சமஸ்க்ருத சந்தஸ்ஸைக் குறிக்கும். பல்வேறு மந்திரங்களுக்கு உண்டான காயத்ரீகளையும் சேர்த்துக்கொண்டால் நலம் பல கிட்டும். மனனம் செய்வதால் மனிதர்களைக் காப்பது மந்திரமாகும். சுவடியில் உள்ள காயத்ரீ மந்திரங்கள்கள் தேவநாகரி எழுத்தில் இருப்பினும் இந்நாட்களில் தேவநாகரி எழுத்துக்களைப் படிக்க தெரிந்தவர்கள் குறைந்துவிட்டதால் தமிழ் எழுத்திலும் இருப்பது பயன் உள்ளதாக இருக்கும் என்பதால் இதில் எல்லா காயத்ரீ மந்திரங்களுமே தமிழ் எழுத்திலும் தரப்பட்டுள்ளன. இறைவழிபாடு செய்யும் அன்பர்களுக்கு இந்நூல் உதவியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

*சிவஞானபோத சூத்திரம்*

சிவாத்ம ஜோதி முனிவரால் இயற்றப்பட்டதாகும். சிவஞானபோதம் எனும் சைவசித்தாந்த நூலின் 12 சூத்திரங்களுக்கு விளக்கத்துடன் கூடியது. வடமொழி மற்றும் தமிழில் 12 சூத்திரங்களும் செய்யுள் வடிவில் கூறப்படுகிறது. தமிழில் மெய்கண்டார் கலை நயத்துடன் கூறியுள்ளார்.

अन्यः सन् व्याप्तितोनन्यः कर्ता कर्मानुसारतः ।
करोति संसृतिं पुंसां अज्ञया समवेतया ॥ (ஸ்லோகம்-2)

அவையே தானேயாய் இரு வினையின்
நோக்கு வரவு புரிய ஆணையின்
நீக்கமின்றி நிற்கு மன்றே.

வடமொழிக்கு நிகரான செய்யுள் வடிவில் மெய்கண்டார் இதனை அமைத்துள்ளார்.

*மூர்த்தி தியானம்*

சரசுவதி மகால் நூலகம் மூர்த்தி தியானம்என்னும் இந்த நூலை இறைவழிபாடு செய்வோருக்கு உறுதுணையாக 800க்கும் அதிகமான மூர்த்தி தியான சுலோகத்தை தொகுத்து வெளியிட்டுள்ளது.

இந்நூல், யாவருக்கும் பயன்தரக்கூடிய வகையில், இதிலுள்ள சுலோகங்களை அனைவரும் அறிந்து கொள்ளும் வகையில் தமிழ்மொழிபெயர்ப்புடன் அமைந்திருக்கின்றது.

ஆகம விதிகளின்படி திருக்கோயில்களில் அமைக்கப்படவேண்டிய கடவுளர்கள் மற்றும் ஸப்த கன்னிகைகள் முதலான பல சிறப்பு வாய்ந்த பெண் தெய்வங்களின் தியானச் சுலோகங்களும் பைரவர் போன்ற ஆண் தெய்வங்களின் தியானச் சுலோகங்களும், தமிழ்நாட்டில் மிக பிரசித்தமான வீரன் முதலான கிராம தேவதைகளின் தியானச் சுலோகங்களும் கூறப்பட்டிருக்கின்றன.

இந்நூலில் தியானம் செய்வதற்கு ஏற்ற வகையில் பாக்களை அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது எல்லா கடவுளின் நாமத்தைக் கூறி அதன் பலனைப் பெரும் அளவிற்கு இந்நூல் அமைந்துள்ளது.

*ஸரஸ்வதி தியானம்*

दोभिर्युक्ता चतुर्भिः स्फटिकमणिमयीमक्षमालां दधाना
हस्तेनैकेन पद्मं सितमपि च शुकं पुस्तकञ्चापरेण ।
भासाकुन्देन्दुशङ्खस्पटिकमणिनिभा भासमाना समाना
सा मे वाग्देवतेय निवसतु वदने सर्वदा सुप्रसन्ना ॥

நான்கு கைகளையுடையவளாயும், ஒரு கையில் ஸ்படிகமணிகளாலான அக்ஷ மாலையையும், ஒரு கையில் வெண்தாமரை மலரையும், மற்றொரு கையில் கிளியையும், மற்றொரு கையில் புத்தகத்தை வைத்திருப்பவளும், வெண்தாமரை, மான், சந்திரன், சங்கு, ஸ்படிக கற்களான மணிகள் இவைகளைப் போல மிக்க வெண்மையான நிறத்துடன் ப்ரகாசிக்கின்றவளும், ஒப்பற்ற வாக்குக்கு தேவதையான ஸரஸ்வதீ மிகவும் மகிழ்ச்சியுடன் கூடியவளாக எப்பொழுதும் என்னுடைய வாக்கில் வசிப்பவளாக இருக்கட்டும்.

*நீதி சதகம்*

நூறு பாக்கள் கொண்ட நூலைச் சதகம் என வடமொழியில் குறிப்பர். பர்த்ருஹரி என்பவர் வடமொழியில் கடவுள் வணக்கம் நீங்கலாக நூறு சுலோகங்கள்கொண்ட நூலே நீதி சதகம் என்பதாகும். கி. பி. 7ம் நூற்றாண்டில் வாழ்ந்தவராகக் கருதப் பெறும் பர்த்ருஹரி இந்நூல் வாயிலாக மனிதகுலம் மேன்மையுற நூறு நீதி கருத்துக்களைக் கூறியுள்ளார். இந்நூலின் சமஸ்கிருதப் பாக்களை மூல சுலோகங்களுக்கு எந்த மாறுபாடின்றி சுவைமிகு தமிழ்ப் பாக்களால் மொழிபெயர்ப்பு செய்துள்ளார். வடமொழி அறிந்தவர்களுக்கு மட்டுமின்றித் தமிழ் மக்களுக்கும் பயன்படும் வகையில் அமைந்துள்ளது.

*சரித்திரம்*

*சிவ பாரத சரிதம்*

இந்நூல் 32 அத்யாயம் கொண்டது. சிவ என்பது சிவாஜியையும் சிவாஜியின் ஆட்சி சரித்திரத்தை கொண்ட கதையின் தொகுப்பு சிவபாரதம் ஆகும்.

1980ல் புனா ஆனந்தசாரம் என்ற அச்சகதாரர்கள் சிவ பாரத சரிதம் என்ற தலைப்பில் வடமொழி மூலம் மட்டும் கொண்ட ஒரு நூலை வெளியிட்டுள்ளனர். இருப்பினும் வடமொழிச் சுவடியும் தமிழ்மொழி பெயர்ப்புச் சுவடியும் சரசுவதி மகால் நூலகத்தில் மட்டுமே உள்ளன என்பதைச் சுட்டி நூலகத்தின் பெருமைதனைப் போற்றியுள்ளனர்.

*பாணிணீய தாதுபாடம்*

வினைச் சொல்லை வடமொழியில் தாது எனப் பொருள் கூறுவர். அவ்வாறு வினைச் சொல்லை கூறும் நூலான பாணிணீய தாது பாடம் கிரந்தம் தமிழ்ப்பொருளுடன் கூடியதாகும்.

*பிரகதீஸ்வர மாஹாத்மியம்*

பிரகதீஸ்வர மாஹாத்மியம் என்பது 30 அத்யாயங்களைக் கொண்டது. அதில் குறிப்பிடப்படுவது முக்தி க்ஷேத்திரங்களைப் பற்றியும், தீர்த்தங்களைப் பற்றியும், சிவபெருமான் பார்வதிக்கு விரிவாகக் கூறுவதாகும். வடமொழியில் உள்ளவற்றை தமிழ் மொழிபெயர்ப்புடன் கூறியுள்ளார். அவ்வாறு சிவபெருமானுக்கு பார்வதி உலகை காக்கும் எந்த நகரங்கள் புண்ணியத் தலமாகவும், மோக்ஷத்தைத் தரக் கூடியது என சிவபெருமான் தேவியை நோக்கியவாறு கூறத் தொடங்கினார். இதனை மிகவும் அழகுடன் வருணிக்கின்றார். வடமொழியில் உள்ள இந்த சிறப்பான கருத்தை அனைவரும் அறிந்துகொள்ளும் வகையில் தமிழ் மொழிபெயர்ப்புடன் அமைந்துள்ளது. நூலில் உள்ள அத்யாயங்களில் சோழ மன்னர்களின் சரித்திரம் கூறப்பெற்றுள்ளது. அவர்கள் சிவாலயத் திருப்பணியை செய்தார்கள். சிவகணங்களின் சரிதமும் இந்நூலில் உரைக்கப்படுகின்றது. இச்சரித்திரத்தை கேட்டவர்கள் இகத்தில் பல சுகங்களையும், பரத்தில் சிவப்பேற்றையும் அடைவார்கள். இப்படிப்பட்ட சரித்திரத்தை நமக்கு தஞ்சை சரசுவதி மகால் நூலகம் மொழிப்பெயர்த்தளித்துள்ளது.

## சோதிடம்

*பூர்வ பாராசர்யம்*

பூர்வபாராசர்யம் என்னும் இந்நூல் ஓர் அரிய சோதிட நூலாகும். வடமொழியில் உள்ள இந்நூல் தமிழாக்கப்பகுதியுடன் இந்நூலகத்தாரால் 1979ம் ஆண்டு முதற்பதிப்பாக வெளியிடப்பட்டது வராஹமிகிரரின் ஹோராசாத்திரம், கல்யாணவர்மனது சாராவளி, ஸ்ரீபதி கேசவனின் ஜாதக பத்ததி ஆகிய தொன்மையான நூல்களின் கருத்துக்களையும், சோதிட நூலின் சாராம்சத்தையும் கொண்டு இதனைப் படைத்ததாக நூலாசிரியர் சுவடியில் குறிப்பிட்டுள்ளார். இந்நூல் சாமிநாத சாஸ்திரி என்பவரால் தமிழாக்கத்துடன் பதிப்பிக்கப் பெற்றது.

வசந்தம் முதலான ருதுக்களையும், சித்திரை முதலான மாதங்களையும், வளர்பிறை, தேய்பிறை என இரு பக்ஷங்களையும் மற்றும் வாரம், திதி, யோகம், கரணம் போன்றவற்றையும் அவைகளின் கால அளவையும், நிர்ணயித்து மேலும் வான ஆராய்ச்சிக்குரிய நுட்பங்களுடன் தங்களது கணித மேதையினால் ஆராய்ச்சி செய்து வான சாத்திரத்தை எழுதினார்கள். சோதிடர் தங்களது கணித மேதையினால் ஆராய்ச்சி செய்து வான சாத்திரத்தை எழுதினார்கள்.

சோதிட சாத்திரத்தை வேதங்களின் வியாகரணம் முதலான ஆறு அங்கங்களுள் ஒன்றாக அமைத்தார்கள். இத்தகைய சிறப்பு வாய்ந்த சுவடிகளையும், நூல்களையும் காப்பாற்றி ஒரு சிறந்த கலைக்கோயிலாக ஆக்கியவர் சரபோஜி மன்னராவார். பல சோதிட நூல்களிலுள்ள விஷயங்களைக் கற்க விரும்புவோரும் சோதிடத்தை முறையாகக் கற்க விரும்புவோரும் பயன்படத்தக்க வகையில் அமைத்துள்ளது.

*காலப்பிரகாசிகை*

1994ஆம் ஆண்டு முதற் பதிப்பாக வெளியிட்ட சோதிடத்துறை நூலே "காலப்பிரகாசிகை" என்னும் இந்நூலாகும். இந்நூல் தமிழ்மொழி பெயர்ப்புடன் வெளியிடப்பட்டது. காலத்தின் நல்ல தீய இயல்பினை 'விளக்கொளி போல்' நின்று பிரகாசப்படுத்தும் நூல். காலப்பிரகாசிகை என்ற சமஸ்கிருத நூல் "ந்ருஸிம்ஹஸூரி" எனும் அறிஞரால் இயற்றப்பட்டது.

*ஜாதக சந்திரிகை*

இந்நூல் அழியா இலக்கியங்கள் பல படைத்த மகாகவி காளிதாசனால் இயற்றப்பட்டது என்பதே இந்நூலின் பெருமைக்குச் சான்றாகும். கடல்போல் பரந்து விரிந்த சாத்திரத்தின் சில முக்கியமான செய்திகளை மட்டும் சுருக்கமாக கூறும் நூல் ஜாதகசந்திரிகை. சரசுவதி மகால் நூலகத்தின் பதிப்பான தமிழ் உரையுடன் கூடிய இந்நூல் கிரந்த எழுத்தில் உள்ளது.

இந்நூலில் கிரகங்களின் பார்வைகள் குரு, சுக்கிரன் முதலானோரின் கேந்திராதிபத்ய தோஷம், ராகு- கேதுகளின் தன்மைகள், ராஜயோகங்கள், விவாஹப் பொருத்தங்கள், செவ்வாய் தோஷம் மற்றும் அதற்கான பரிகாரம் முதலான பல முக்கியமான கருத்துக்கள் தமிழ் உரையுடன் எழுதப்பட்டுள்ளது.

*அம்பி சாஸ்திரிகளின் கீர்த்தனைகள்*

ஆய கலைகள் அறுபத்து நான்கினுள் மிகமிகச் சிறப்பு வாய்ந்தது இசைக்கலை. தேவர்கள், சித்தர்கள், கந்தர்வர்கள், யக்ஷர்கள், கின்னரர்கள், நந்தி, தும்புரு முதலான வானவர்களும், முனிவர்களும் இசை வல்லுனர்களாகவும், இசையை அனுபவிப்பதையே தங்களது இன்பகரமான பொழுதுபோக்காகவும் அமைத்துக் கொண்டார்கள்.

இராமாயணத்தை அவருடைய ஆசிரமத்தில் வளர்ந்து வந்த சீதையின் குழந்தைகளான லவ, குசர்களுக்கு கற்றுக் கொடுத்து, இசைடன் நன்கு பாடுமாறும் செய்து வைத்தார். ஆசிரமத்தில் பாடிக்கொண்டிருந்த அச்சிறார்கள் இருவரும் ஒரு சமயம் அயோத்தி சென்று இராமனது அவையில் இனிமையாகப் பாடினார்கள். இந்நூல் வடமொழி எழுத்து, வரிவடிவம், பொருளும் ஸ்வரசாகித்தியத்துடன் காணப்படுகிறது.

அனைத்து கலைஞர்களும் பொருளுடன் அறிந்துகொள்வதற்கு ஏற்ப கீர்த்தனங்கள் பொழிப்புரையுடன் கூடியதாகவும் பதிப்பிக்கப்பட்டுள்ளன. இசையில் ஆர்வம் கொண்ட அனைவரும் இந்நூலின் பொருள் உணர்ந்து பயன் பெற முடியும் என்பது திண்ணம்.

## மருத்துவம்

*ஆயுர்வேத உபதேசங்கள்*

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்ற பழமொழிக்கு ஏற்ப நோயின்றி வாழ்வதற்குரிய நெறி முறைகளையும் அவற்றில் நோய் நம்மை அணுகாத வகையில் நாம் கவனித்து வருதல் வேண்டும். அதுபோலவே வடமொழி தெரியாதவர்கள் இந்நூலின் மகத்துவத்தை அறிந்துகொள்ளும் வகையில் தமிழ் மொழிபெயர்ப்புடன் அமைந்துள்ளது.

*நாடி சக்கரம்*

நாடி சக்கரம் ஒரு வடமொழி நூல். இந்நூலில் வாத, பித்த, கபம் ஏனைய வியாதிகளையும், நாடியின் நடையைக் கொண்டு கண்டுபிடிக்கும் வழியை விளக்கும் நூல்.

ஒரு நோயாளியின் நோயை நிச்சயிப்பதற்கு 8 வகை பரிகைஷ அவசியம். 1) நாடி, 2) ஸ்பரிசம் (தொட்டுப்பார்த்தல்), 3) தேகத்தின் நிறம், 4) குரல், 5) கண்கள், 6) மலம், 7) மூத்திரம், 8) நாவு. இதில் முக்கியமானது நாடி. நாடியைப் பார்த்து நம் உடலில் உள்ள அசைவுகளும், இதயத்தின் துடிப்பையும் காணமுடிகிறது. நம் உடலில் உள்ள அசைவுகளைக் தெரிவித்துக் கொள்ளும் அளவிற்கு நாடி மிகவும் பயனுள்ளதாக அமைய இந்நூல் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டுள்ளது.

சரசுவதி மகால் நூலகத்தில் வெளியிடப்பட்ட தமிழ்மொழிபெயர்ப்புடன் கூடிய வடமொழி நூல்களில் முக்கியமானவற்றை அனைவரும் அறிந்து கொள்ளும் வகையில் இங்கு கூறப்பட்டுள்ளது.

# திருவண்ணாமலை வழிநடைப் பதம் காட்டும் வரலாற்றுச் செய்திகள்

**மணி . மாறன்,**

தமிழ்ப் பண்டிதர்.
சரசுவதி மகால் நூலகம்,
தஞ்சாவூர்.

தஞ்சாவூர் சரசுவதி மகால் நூலகத்தின் தமிழ்த்துறையில் எண்:1222 கொண்ட தமிழ்ச்சுவடி திருவண்ணாமலை வழிநடைப்பதம் என்னும் தலைப்பு கொண்டதாகும். இச்சுவடி மூன்று ஏடுகளைக் கொண்டுள்ளது, முதல் ஏடு காணப்பெறவில்லை. மொத்தமுள்ள 12 பாடல்களில் இரண்டாவது பாடலில் தொடங்கி 11 பாடல்களை மட்டுமே கொண்டுள்ளது. பாடலின் இறுதி அடியில் காணப்படும் திருவண்ணாமலை வழிநடைப் பதம் முற்றிற்று என்ற வரியினைக்கொண்டே இதன் தலைப்பினை அறிய முடிகின்றது. ஆசிரியர் பெயர் அறிய இயலவில்லை.

இப்பாடலடிகளின் வழியாக அன்றைய திருவண்ணாமலையில் இருந்த சத்திரங்களின் பெயர்களையும், ஆங்கிலேய அலுவலரின் பெயரினையும் அறிந்துகொள்ள முடிகின்றது. அருணாசலேசுவரரை புகழ்வதோடு நில்லாமல் அவ்வூரின் இயல்பினையும் அழகுடன் எடுத்துக்கூறுகின்றது. இச்சுவடி நூல் தமிழில் இருந்தாலும், ஆங்காங்கே கிரந்த எழுத்துக்கள் கலந்து மணிப்பிரவாள நடையில் எழுதப்பட்டுள்ளது சிறப்பிற்குரிய ஒன்றாகும்.

தஞ்சையில் சோழர் காலந்தொட்டே இசை, நாட்டியம், சிற்பம், ஓவியம் எனப் பல்வேறு கலைகள் செழித்து வளர்ந்தன. பின்னர் வந்த நாயக்க மன்னர்களான இரகுநாத நாயக்கர், விஜயராகவ நாயக்கர் காலத்தில் தமிழிசை போற்றி வளர்க்கப்பட்டது. இவர்கள் காலத்தில் தான் முத்துத்தாண்டவர், ஷேத்ரக்ஞர் போன்றவர்களின் பத சாகித்தியங்கள் தோன்றின.

நாயக்க மன்னர்களை அடுத்து தஞ்சையை ஆண்ட மராத்திய மன்னன் சகஜி சிறந்த இசை அறிஞனாகத் திகழ்ந்தான். இம்மன்னனே பக்திப் பதங்கள், பாவப் பதங்கள், வைராக்கியப் பதங்கள், சிருங்காரப் பதங்கள், ஹாஸ்யப் பதங்கள், நீதிப் பதங்கள், மங்களப் பதங்கள் என சுமார் 208 பதங்களை இயற்றினான். இம்மன்னனின் காலத்தில் வாசுதேவகவி, முத்துக்கவி, இராமபாரதி, கிரிராஜ கவி போன்ற புலவர்கள் தமிழ் மற்றும் தெலுங்கு மொழிகளில் பத சாகித்தியங்களை இயற்றினர்.

பதங்களை இயற்றும் கவிஞன் யாப்பிலக்கணப் புலமையும், அலங்கார சாஸ்திரத்தில் ரஸ - பாவமும், இசை நாட்டியத்துறையில் ராக - ரஸ - ஸ்வர - தாள ஞானமும், தலைவன்-தலைவி உணர்வுகளை நன்கு உணர்ந்தவர்களுமே உயர்தரமான பத சாகித்தியங்களை இயற்றமுடியும் என்பது இத்துறை சார்ந்தவர்களின் கருத்தாகும்.

நாட்டியத்திற்காக ஏற்பட்ட உருப்படிகளில் பதம் என்பதும் ஒருவகை. ( பாட்டு, பாடல் பா, செய்யுள், உருப்படி என்பன ஒரே பொருளைத் தருவன.) இது சவுக்க காலத்தில் பாடப்படும். சாகித்தியம் எளிதாக இருப்பினும், அதில் சில பாகங்கள் பல உட்கருத்துக்களைக் கொண்டனவாக இருக்கும் அப்படிப்பட்ட உட்கருத்துக்களை ஆடுவோர் அபிநயத்தின் மூலம் விளக்குவார்கள். ஒரு பதத்தை அனுபவிப்பதற்கு, அது யாரால் பாடப்படுகிறது, யாரைப்பார்த்துப் பாடப்படுகிறது, எந்த சமயத்தில் பாடப்படுகிறது பாடுவோரின் நிலைமை யாது என்னும் செய்திகளை தெரிந்து கொள்ள வேண்டும்.

உயரிய பதங்கள், பகிர் சிருங்காரம் - அந்தர் பக்தி என்னும் இரட்டைப் பொருளுடன் கூடி அமைந்திருக்கும். வெளிப்படையாகக் காதற் சுவை போன்று இருப்பினும், உள்ளே தத்துவார்த்தமும் கூடினதாயிருக்கும். கடவுளை நாயக நாயகி முறை மூலமாகத் தொழுவது என்பது ஒரு மரபு.

நாயகன் என்னும் சொல் கடவுளாகிய பரமான்மாவையும், நாயகி என்னும் சொல் சீவான்மாவையும், சகி என்னும் சொல் சீவான்மாவை பரமான்விடம் சேர்க்க முயலும் ஞான குருவையும் குறிக்கும். நாயகனைக் காணாது வருந்தும் நாயகியின் மனநிலையும், கடவுளைக் காணாது வருந்தும் பக்தனின் மனநிலையும் ஒருவாறு ஒத்திருக்கும். ஜயதேவரின் கீதகோவிந்தம், நாயக நாயகி தொடர்பாக இயற்றப்பட்டவற்றுள் சிறந்ததாகும்.

பதங்களுக்கு பல்லவி, அனுபல்லவி, சரணம் என்னும் அங்க வேறுபாடுகள் உண்டு. ஒவ்வொரு பதத்திலும் மூன்று சரணங்களாவது இருக்கும். சங்கதிகளும் கடினமான பிரயோகங்களும் பதங்களில் வராது. முற்காலத்தில் கடவுள் துதியாக அமைந்துள்ள சாகித்தியங்களையும் பதங்களென அழைத்தார்கள். ஆனால் பின்னர் கடவுள் துதியாக உள்ள பாட்டுக்களைக் கீர்த்தனங்களென்றும், நாயக நாயகி தொடர்பாக உள்ளவைகளைப் பதங்களென்றும் அழைத்தனர்.

முத்துத்தாண்டவர் இயற்றிய அபினய பதங்களே தமிழில் கிடைத்துள்ள பதங்களுள் காலத்தால் பழமையானவை என்று கருத முடிகிறது. இவருக்குப்பின் வாசுதேவ கவியின் பாடல்களைக்கூறலாம். இவருடைய காலத்தில் வாழ்ந்த

இராமபாரதியும் பல பதங்களைப் பாடியுள்ளார். இவர்கள் இருவருமே சிருங்காரப் பதங்களை இயற்றியவர்கள் இவர்களைப் பின்பற்றியே தமிழில் பத சாகித்தியங்களை இயற்றும் வழக்கம் ஏற்பட்டது. இவர்களுக்கு பின் பிச்சாண்டார் கோயில் சுப்பராமையர், கனம் கிருஷ்ணயர், பரிமளரங்கன், மூவலூர் சபாபதி ஆகியோர் பதங்களைப் பாடியுள்ளனர்.

இந்நூலகத்திலுள்ள சுவடியின் பாடலடிகள்,

2. அதிபன ரங்கைய நாயகன் சத்திரம்
அதோபா ரந்தணர் கூட்டம் பா
லன்னம் பதார்த்தங்கள் முப்பழங்களோ
டவர்க்குக் கிடைக்கும் நல்லூட்டம்
புதுவை யப்பா சாமிப்பிள்ளை பங்களாவோ
வெகு நீட்டம் - அதின்
புறத்திலே பார் கற்பகச் சோலை போலக்
காணுதவர் கூட்டம்
வதட்ரேப்பா சாமி தோட்டத்தைப் பாரடி
மதிக்கப்படு மிந்த ரோட்டை யுந்தேரடி
மதலாகிரி மிகவேறுது ததிதானிது ஸதியேனினி
இதமாகிய ரதி கேளியில் அணைவாயடி- யனமே - திரு -ஒற்றி- 2

( புதுவை என்கிற அடியில் 2-ஆம் மோனையில்லை, இ எதினுடைய 5,6 அடிகளுக்கு மோனையில்லை.)

3. தனவாரி வரதராஜ மகிபன் சத்திரம் பாரடி மானே - இதோ
மணிகண்ட முதலிகட்டுஞ் சத்திரம் மதுரமான செந்தேனே
தனமிகும் அருணாச்சல செட்டியார் சத்திர மாமிதில்தானே-வேத
சாத்திரங்களோதும் பள்ளிக்கூடம் வைத்த தர்மத்தை யென்
-சொல்லுவேனே
இனிய நிஜாமுனி யப்பன் சத்திரமிது மனு நேர்
திருக்காமி பூபன் மெத்தையிது
மயிலே மதன் கணைதூவிட
மலயாநில மனல் வீசுது
எனதா ருயிரது சோருது
தயை கூர்வது நலமாமடி - ஒற்றி -3

4. அருணாசலேச்வரன் பேட்டை யிதோ

அதோ ஆயிரந் தேர் விளக்கெண்ணடி அதன்

அருகிற் காலாட்டிபேட்டை யது தாண்டி

அடைந்தோம் ஆதிபுரி நண்ணடி

வருகிறார் தியாகர் நடனஞ் செய்ய

வந்து தரிசனம் பண்ணடி நாம்செய்

வல்வினை தீருமென சத்திரந்தானிது மானே

யென்னுடனே யுண்ணடி

சதுவறை வீடிது சதிராய்ப் படுக்கலாம்

அரிவையே மத(ன)ராஜன் விழவை முடிக்கலாம்

அரையொன்றிய கலைசென்றிட முலையுங்கையில் நிலைதங்கிட

அதரந்தனில் இதரம் பெற சுரதஞ்செயு மதசுந்தரி- ஒற்றி - 4

இதில் மதன என்பது மத என்று கடைக்குறைந்த பதமாயிற்று. இந்த பதத்திலும் சில இடத்தில் அதிக அட்சரமும், சில இடத்தில் அட்சரக்குறைவும் உண்டு. விபரம் இதில் 2 ஆம் அடியில் 2 ஆம் சரணத்தில் - லன்னம்ப - தார்த்தங்கள்- முப்ப - ழுங்களோ - டவர்குக்கி- டைக்கும் நல்-லூட்டம்-இந்த ஏழு துண்டுகளிலுள்ள 3 ஆம் துண்டில் எழுத்துக்குறைவும் 5ஆம் துண்டில் ஒரு எழுத்து அதிமாகவும் இருக்கிறது. துண்டு 1க்கு 3 எழுத்தாயிருக்க வேண்டியதாகையால் முன் சொன்ன 3 ஆம் துண்டில் 2ஆம் எழுத்தும் 5ஆம் துண்டில் 4 ஆம் எழுத்துமாக இருக்கிறது. இப்படியே இதில் அநேக இடத்தில் உண்டு.

அவனியோர் போற்றுந் திருவண்ணாமலை

யன்பர் யிதுதான் பாராய்- இதில்

ஆகாசம் முட்டிய நாலு கோபுர

மதினுயரத்தைப் பாராய்

சிவனடியார்கள் சிவ சிவா வென்று

செப்புகிறா ரிதை கேளாய் நீ நன்று

பவநீங்கிடும் சுகமோங்கிடும்

பசிதீர்ந்திடும் பிணி தீர்ந்திடும்

பதம் வாய்ந்திடும் இதம் சேர்ந்திடும்

பலஞ்சேர்ந்திடும் களி கூர்ந்திடும் - தி-

5. அங்கங்கே கேப்புக்காரர் பொருள்களை
யபகரிக்கிறார் பாராய் இந்த
அண்ட மதிர்ந்திடும் அதிர்வெடி யோசை
யதனை கேட்டு நீ தேறாய்
எங்கெங்குந் தீவட்டி பாணம் மத்தாப்பு
யெரிவதை கண்ணால் பாராய் என்றும்
யாரையுங் கார்த்திடு மீச்வரர் தேர்மே
லிதோ வருகிறார் பாராய்
எங்கெங்கும் வாத்ய மனேக முழங்குது
எங்கும் ஜனங்கள் நிறைந்து தயங்குது
யீசா ஸர்வேசா பரமேசா யுமைவாஸா
கருணேசா வருணேசா ஹரணேசா
தரணீசா வென - திரு.

6. திருக்குளங்களில் மூழ்கி நாமுங் கிரி பிரதட்சணம் செய்வோம்
ஓம் சிவ சிவ சிவ ஹர ஹர வென்று ஜெபங்கள் நன்றாய் செய்வோம்
அரனடி யவர்க்கன்ன ஸொர்ணமாடை வெகுதாந(ன)ம் செய்வோம். நல்ல
அடியண்ணாமலையாரைப் பணிந்து
அன்பாய்த் துதிகள் செய்வோம்.
அருணாசலேச்வரர் கோவிலுள் சென்று
அநேகமாக பிரதட்சணம் வந்து
அரிதாகிய பவம் நீங்கிட
பெரிதாகிய பதம் சேர்ந்திட
ஐந்தட்சரம் ஜெபஞ் செய்குவோம்.

7. ஓம் ஹர ஹர ஹர ஹர ஹர வென்று
வோதி மூலஸ்தாநம் சேர்ந்தோம்-நல்ல
உம்பர்கள் போற்றிடு மருணாசலர ருபய
பாதத்தைப் பணிந்தோம்
தாம் தாம் தக்க ஜேம் தரிகிட தைதை
தககாம் தோம் கிரிதக
தத்ஜே ணதத்திமி தக தரிகிடத திமித கிடதாம் தோம்

தாம்தோம் தகதரி கிட தைதா வென்று
தாஸிகளாடு கிறார்கள் பாரா யின்று
நாமிப்போது மலைமேலுள தீவத்தினை
தெரிசித்து பின் நன்றாய் ஸே
வித்தோம் மன குன்றாய் தியாநித்தோம் கன -திரு-

8. அலைகடல் போலே மாடுகள் வந்து
அதோ பார் நிற்குது கூட்டம் - பல
அன்ன ஸ(ச)த்திரங்களில் ஜோஹி ஜங்கமர்க
ளநேகர் கூடினார் கூட்டம்
விலைமாதர் தங்கள் வீடுகளி லெல்லாம்
வேண்டிய புருஷர் கூட்டம் - எங்கும்
வேதியர்கள் கூடி வேதங்க ளோதுற
வேடிக்கை பார்த்து சிரேஷ்டம் (கோஷம்).
மலைக்காதே யிந்த வூர் நல்லவாட்டம்
மாதே நமக்கு தான் நல்ல கொண்டாட்டம்
மலையாளப் பெண்டுகளின் முலை ( ஸ்தனமா) யாடுது
மலைபோல மதனைங்கணை எனைவாட்டுது
மனதைரியமே ப்பூட்டுது - திரு -

9. திருவண்ணாமலை நகர் விசாலத்தை
தேன்மொழியே நன்றாய் பாராய் - நல்ல
தெருக்களி லெல்லாம் ஜெனங்கள் நிறைந்து
சேர்ந்திருப்பதைப் பாராய்
அரிய பன்மலர்ப் பூந்தோட்டங்க
ளளவில்லை யதைப் பாராய் நன்றாய்
அங்கங்கே குளங்கள் வெகுவாய் வெட்டிய
அதிசயத்தை நீ பாராய்
அருணோச லேச்வரரி தோவருகிறா
ரவரைப் பணிந்து துதிப்போம் சீரார்
அரிதாகிய பெண்ணே விழு அஷ்டாங்கமாய்
ஸேவித்தெழு ஹர ஹர ஹர ஹரவென்றிடு
அடியேங்களைக் காரென்றிடு -திரு-

10. அரஹர ஹர ஹர ஹரவென்று
அன்பாய் துதிக்கிறார் பாராய் - நல்ல
அருணாசல புராணத்தை யாவரும்
அன்பாய் படிக்கிறார் கேளாய்
திருவாசகத்தை யாவரும் நன்றாய்
தெளிய வாசிக்கிறார் கேளாய் நன்றாய்
சிவ சிவ சிவ சிவ சிவ வென்று
சிலர்களோதுறார் கேளாய்
அருணாசலேச்வர ருத்சவ வேடிக்கை
யதை நீ பாரிது யெப்போதும் வாடிக்கை
அருணாசலம் பிரபல ( பெரிய ) ஸ்தலம்
பெரியோர்களுக் கிதுவே பலம்
அருணாசலமே நிர்மலம்
அனைவர்க்குமே இதுவே நலம் -திரு.

11. ஹெட் போலீஸ் ஸிஷாண்டுகலே கட்டரிதோ பார்
தாசீல்தார் கூடி நல்ல
எண்ணில்லா ஆகட்டு சட்டப்படி
யமுலி தோபார் செய்கிறார் வாடி
வாட்டமில்லாத கடைத்தெருக்கள்
தானிது வந்துபார் என்னுடன் கூடி இந்த
வைபோகத்தைப் போலே யெங்கும்
கண்டதில்லை மாதே கடிய நீ வாடி
நம்ப மூட்டையைப் பத்திரமாகவே வைத்திரு
முடியப் போய் பார்க்கலாம் பெண்ணே
யிந்த தெரு கூட்டங்களில் நாமேவியே
வாட்டங்களொன் றில்லாமலே கூடி
கடை வீதியுள் வேடிக்கையை பார்ப்போம் - வள - தி-

12. மயிலே யுந்தனுக் கென்னென்ன வேணும்
மறவாம லிப்போது சொல்லடி - முல்லை
மல்லிகை சாமந்தி மருக்கொழுந்திவை
வாங்கித் தருகிறேன் நில்லடி
மயிலே யிந்த வூரை விட்டுப் போவதர்க்(ற்)கு
மனஞ்சற்றாகிலும் வல்லேடி இங்கே

வந்து பத்து தினமாச்சுது நம்மூருக்கே
பிரயாணம் நீ பண்ணடி
கையினில் மூட்டையை கட்டி யெடுத்துக் கொள்
கடிய உனக்கு வேண்டியதை வாங்கிக் கொள்
மயிலே மலைமருந்தன் பதம் செய்தேனிதை
காம் போதியில் மகிழ்வோ டுடன் பாடி விளையாடி
நாங்கூடி வள - திரு - திருவண்ணாமலை வழி நடை பதம் முற்றிற்று.

இப்பாடலின் வாயிலாக திருவண்ணமலையில் இருந்த அதிபனரங்கைய நாயகன் சத்திரம்,வரதராஜ மகிபன் சத்திரம், அருணாச்சல செட்டியார் சத்திரம், நிஜாமுனியப்பன் சத்திரம், மணிகண்ட முதலி கட்டுஞ் சத்திரம், அன்ன சத்திரங்கள் பல இருத்துள்ளதையும்,புதுவை அப்பா சாமிப்பிள்ளை பங்களா, வதட்டூரப்பா சாமி தோட்டம் இருந்த செய்தியினையும், அருணாசலேசுவரன் பேட்டை, காலாட்டிபேட்டை போன்ற பகுதிகள் இருந்துள்ளதையும் அறிய முடிகின்றது.

தேர் மீது சுவாமி ஊர்வலம் வரும் வேளையில் அதிர்வெடி, தீவட்டி பாணம், மத்தாப்பு போன்றவற்றை பயன்படுத்தி வானவேடிக்கை நிகழ்ச்சி நடைபெற்றதையும் அறியமுடிகின்றது. அளவில்லா பூந்தோட்டங்களையும், அன்ன சத்திரங்களில் யோகிகள் (ஜோஹி) கூடியிருந்ததையும், கடைத் தெருக்கள் இருந்ததையும், ஆங்கிலேய போலீஸ் அதிகாரி ஸிஷாண்டுகலே போன்றவர்களின் பெயரினையும் அறிய முடிகின்றது. முல்லை, மல்லிகை,சாமந்தி, மருக்கொழுந்து போன்ற பூக்கள் விற்பனை நடைபெற்றதையும் இப்பாடலடிகளின் வாயிலாகக் காணமுடிகிறது.

அரிய பன்மலர்ப் பூந்தோட்டங்கள், நிறைய குளங்கள் இருந்ததையும், அருணாச்சல புராணம் படிக்கின்றவர்களையும், திருவாசகம் ஓதுகின்றவர்கள் இருந்ததையும், அருணாசலேச்வரர் உற்சவ நிகழ்ச்சி நடைபெற்றதையும், தாள நயத்துடன் தாசிகள் ஆடுகின்றதையும், வேத சாத்திரங்கள் கற்றுத்தர பள்ளிகள் இருந்ததையும், வேதியர்கள் வேதம் ஓதிய காட்சியினையும், சுவாமி ஊர்வலத்தில் பல்வகை வாத்தியங்கள் முழங்கியதையும் அறிய முடிகின்றது.

***

# தஞ்சாபுர அன்னதான மகா நாடகம்

**D. ரவி,** M.A.,M.Phil.,B.Ed.,

தெலுங்கு பண்டிதர்,
சரசுவதி மகால் நூலகம்,
தஞ்சாவூர்.

இந்த நாடகத்தின் ஆசிரியர் புருஷோத்தம தீக்ஷிதர். இவர் விஜயராகவ நாயக்கர் சபையில் கவி சக்கரவர்த்தியாக விளங்கியவர். விரும்பியதை அளிக்கவல்லமையுடைய குருவும், தேவதையும் ஆன ஸ்ரீனிவாச சுவாமியின் உண்மையான விச்வாசியாக இருந்தவர் புருஷோத்தம தீக்ஷிதரவர்கள். ஹாஸ்ய ரஸத்தை பிரதானமாகக் கொண்டு இந்த தஞ்சாபுர அன்னதான நாடகத்தை இயற்றியுள்ளார்.

இந்த மகா நாடகம் யக்ஷகான வகையைச் சேர்ந்தது. தெலுங்கு மொழியில் வெளிவந்துள்ள சிறப்பான இந்த நூலின் நாயகன் விஜயராகவ நாயக்க மன்னன். நூறாயிரத்திற்கும் மேற்பட்ட வேதியர்களை குடும்பத்தோடு எப்போதும் அன்னமளித்துக் காத்த பெருமை மிக்க விஜயராகவ நாயகனுடைய கொடைத்திறன் பற்றிக் கூறுவதே இந்த நாடகத்தின் நோக்கமாகும்.

நல்ல ரசிகரும், பண்டிதரும் ஆன பப்புதிப்பா பட்லு எனும் ஒரு சோம்பேறி பிராமணன் தன் குடும்பத்தோடு தஞ்சாவூர் சத்திரத்தில் தங்கினான். அவன் சத்திர அதிகாரியோடும். சத்திரத்திற்கு வந்தவர்களோடும் ஆற்றுகின்ற உரையாடலே இந்த நாடகத்தின் கருப்பொருளாக அமைந்திருக்கின்றது.

இந்த யக்ஷகானம் பிரஹஸன வகையைச் சார்ந்தது. அதற்கு தக்கவாறு சூழ்நிலைகளும், பாத்திரங்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன. இது உரைநடை வடிவிலும் பாத்திர பிரவேசம் முதலானவை கொண்டு உரையாடல் முறையிலும் அமைந்துள்ளது. இதில் இருக்கும் சொற்கள் எல்லாம் புருஷோத்தம தீக்ஷிதரை உத்தம கவியாக நிரூபிக்கின்றது. சந்திர பிரகரணம் திருமலைகொளந்தியின் பிரசங்கத்தின் போது குறிப்பிடப்பட்ட நாள் கீலக வருஷம் பங்குனி மாதம் என்பதால் கி.பி. 1669 ஆம் ஆண்டு இந்நூல் எழுதப்பட்டதாகக் கொள்ளமுடிகிறது.

அந்த நாளில் வெளிவந்துள்ள யக்ஷகானங்களுள் தஞ்சாபுர அன்னதானம் சிறப்பாக போற்றப்பட்டு இருக்கிறது. மற்றொரு கோணத்தில் பார்த்தால் இது ஒரு

(க்ஷுத்ர)தரமற்ற காவ்யம் என்று சொல்லலாம். அந்த காலத்தில் இருந்த நிலைகளையும் அக்கால மக்களின் வாழ்க்கை முறையினையும் கவிஞர் இந்நாடகத்தில் சிறப்பாக வருணித்திருக்கிறார். தானத்தில் சிறந்தது அன்னதானம் என்ற அடிப்படையில் அதற்கான பாத்திரத்தையும் சிறப்பாக அமைத்து திறம்பட இந்நாடகத்தை கவிஞர் இயற்றியிருக்கின்றார்.

நாயக்க மன்னர்கள் இடைவிடாமல் செய்த அன்னதானப் பெருமையை இந்நாடகம் விளக்குகின்றது.

நாடகம் கூறும் செய்திகளை நாம் இனி பார்ப்போம். பப்புதிப்பா பட்லு என்பவர் தலைமையில் ஒரு யாத்திரைக்குழு மன்னர்களுடைய தானத்தினைப் பெற்று சத்திரத்தில் சாப்பாடு, மடத்தில் தூங்குவதுமாக காலங் கழித்து வந்தனர். அப்படிக் காலம் கழித்தவர்கள் சத்திரத்தில் கழுத்து வரைக்கும் சாப்பிட்டு உற்சாகமாக இன்ப வாழ்க்கையில் திளைத்ததை கவிஞர் இந்நாடகத்தில் எடுத்தியம்புகிறார்.

நாயக்க மன்னர்களின் இடைவிடாது செய்த அன்னதானம் அந்த நாளில் நிலவியிருந்த அவல நிலையே காரணம் என்பதனை ஹாஸ்யரசத்தை அங்கமாகக் கொண்டு இந்நாடகத்தை கவிஞர் திறம்பட சித்தரித்துள்ளார். அக்கால நிலமையை காட்டுவதாயினும் இது ஆந்திர வாங்மயத்தில் கற்பூரக்கட்டி போல் இக்காவ்யம் சிறப்பாக பேசப்படுகிறது.

அந்த காலத்தில் தஞ்சாபுரி சத்திரத்தில் வேலை பார்ப்பவர்களும் தமிழர்களே பெரும்பாலும் இருந்தனர். ஆகையால் சத்திராதிகாரிகளுடைய உரையாடல்ளைக் கவி தமிழில் எழுதினார். அந்த சத்திர அதிகாரிகளுள் ஒருவரான நெல்லூரு எல்லமராஜு என்பவர் மட்டும் தெலுங்கில் பேசுபவர். அண்ணிகுட்டி, கரணிகுலு, சுயம்பாலகர், சுத்திவாண்டு ஆகிய சத்திரப் பணியாளர்களால் ஒரு சில தெலுங்கு வார்த்தைகள் பேசப்பட்டன. தமிழையே அவர்கள் அதிகமாகப் பேசி வந்தனர். ஆகையினால் இந்நூலில் பாதியளவு தமிழ் வார்த்தைகளே காணக்கிடைக்கின்றன.

இந்த நூலில், அப்பம் வாத்தியாருடைய தமிழ் சொற்பொழிவுகளில், கிருஷ்ணதேவராயர், செவப்ப நாயக்கர் பற்றிய புகழ்ச்சிகள் இடம்பெற்றிருந்தன. இந்த தஞ்சாவூர் அன்னதான சத்திரங்கள் இந்த மன்னர்களுடைய காலத்தில் இருந்திருக்குமோ என்ற ஐயப்பாடு தோன்றுகிறது. தஞ்சாவூர் சத்திரத்தை பற்றி ஒரு கட்டுக்கதை ராஜா திம்மருசய்யம் பேரில் ஆந்திர நாட்டில் நிலவிவந்தது. அதில் தந்தை பேசுவதற்கு பதில் மகனே பேசுகின்றார். அந்த நாளில் தந்தை வாக்குக்கு பதில் மகனுடைய வாக்கே நடைமுறையில் இருந்தது. ஹாஸ்ய கதைகளிலிருந்து இம்முறை நடைமுறைக்கு

வந்துள்ளது. முதன்முதலில் போதனார்யர் இயற்றியதாக நம்பப்படுகிற வீரபத்திர விஜயத்தில் இந்த முறை இடம் பெற்றுள்ளது. இந்த ஹாஸ்ய கதைகளும் அதன் வழி கூறும் மந்திரங்களும் ரங்கராஜம்மா எழுதிய மன்னாருதாசு விலாசத்தில் காணப்படுகின்றன.

நகரத்தில் உள்ளாரிடம் முகூர்த்தம் நிர்ணயிக்க சொன்னால் இந்த ஏஷா கதைகளை கூறுவார்கள். தஞ்சாபுரி அன்னதான நாடகத்தில் இவ்விதமான ஏஷா கதைகள் கூறப்படுகின்றன.

*நாடகக் கதைச்சுருக்கம்*

இந்த தஞ்சாபுர அன்னதான மகா நாடகம், சுவடி எண். 529ல் இருந்து எடுக்கப்பட்டது. இது தெலுங்கு மொழியில் வெளிவந்துள்ளது. இக்கதை தமிழ்மொழி தெரிந்தவர்களுக்கும் உபயோகமாக இருக்கும் என்ற காரணத்தால் இக்கதை தமிழில் வெளியிடப்படுகிறது.

*அன்னதானம்* : தஞ்சாவூரில் அக்காலத்தில் யாரும் பசியுடன் இருக்கக்கூடாது என்ற நோக்கத்தில் இங்கு வந்தவர்கள் யாராக இருந்தாலும் அவர்களுக்கு அன்னமளித்து காத்த பெருமையால், விஜயராகவ நாயக்கனுடைய கொடைத் திறன் நமக்கு புரிகிறது. பலநாடுகளில் இருந்து தீராத வறுமையின் காரணமாக பலர் தஞ்சைக்கு வந்தார்கள். வந்தாரை வாழவைக்கும் நாடு சோழநட்டில் உள்ள தஞ்சாவூராகும்.

புருஷோத்தம தீக்ஷிதருடைய நூல் தஞ்சாபுர அன்னதான மகா நாடகம் ஆகும். தஞ்சாபுர அன்னதான நாடகம் விஜயராகவன் காலத்தில் அன்ன தானத்தை பற்றி புகழ்கின்ற ஒரு கதையாகும். இதில் ஹாஸ்ய ரஸம் பிரதானமாக அமைந்துள்ளது. இந்த சத்திரத்தின் ஓர் அதிகாரி நெல்லூரி எல்லமராஜு, சென்ற மாதத்து நிலுவையும் இந்த மாதத்து கணக்கு விவரமும் அறியவேண்டி கணக்கு பிள்ளையை அழைத்து வருமாறு அன்னகுட்டி அய்யருக்கு கட்டளையிடுகிறார். அவரும் திருமலைகொளந்தியா பிள்ளையிடம் சென்று அதிகாரி அழைப்பதாக தெரிவிக்கிறார். கணக்குபிள்ளை வந்தவுடன் அவரிடம் எல்லமராஜு, “வாருங்கள் திருமலைகொளந்தியா பிள்ளை, போன மாசத்து கணக்கும் வகைப்படுத்தி எழுதவில்லை. எப்போதுமே ஏன் எருமை பால் குடிச்சது போலே சொரிந்துகொண்டு சும்மா இருக்கிறீர்கள்” என்று வினவினார். அதற்கு கொளந்தியா பிள்ளை சொல்கிறார், “தேவரீர், பாப்பாரும் கீப்பாரும் கூத்தாடியாலும் கொடங்கட்டியாளோடும் பேசி கொண்டு இருந்தால் அடியேன் யாருக்கு கணக்கு சொல்ல? என்று ஹஸ்தந்தரகரணம் நல்லநயனானுக்கு கணக்கு எடுத்துவர கூறுகிறார்.

ஹஸ்தந்தரகரணம் நல்லநயனம், அய்யா எடுத்து வருகிறேன் என்று கூறி, கீலக வருஷம் பங்குனி மாசம் 12ம் தேதி ராமானுஜ கூட்டத்துக்கு, அரிசி விட்டதுக்கு விவரம் : பதினெட்டு மாகாணிக்கால் முத்திரைபடி அஞ்சகொலுன்டாகலே விட்ட அரிசி முன்னூத்து முப்பது கலம். முக்குருணியிராசி. இதுவும் மேல்படி மத்திய கூட்டத்துக்கு விட்ட அரிசி இருநூற்று ஐம்பது கலம் இருதூணி பதுக்கு இதுவும் பெரிய சத்திரத்துக்கு விட்ட அரிசி ரெண்டாயிரத்து ஆறுநூற்று முப்பது கலம் தூணி பதக்கு ஆக முந்நூற்று முப்பது கலம் தூணி பதக்குராசி என்று கூறுகிறான்.படியரிசி விவரம்: சுயம்பாகியன் முக்குருணி மேல்படி மெத்தவன் தூணிபதக்கு ராசி சுத்திராமன் ஜனம் நாலுக்கு இரு தூணி பதக்கு அடியேன் பத்துனி ஆறு ராசி என்று ஹஸ்த கங்கரணம் சொல்கிறார்.

ஹஸ்தந்தரகரணம் நல்லநயனம் மேலும் கூறுகிறார். நேற்று களஞ்சியத்திலிருந்து அரிசி வருகிற போது கணக்கு அஞ்சுபாதி புறம்பாக சாய்ந்தது என்று கணக்கு பிள்ளே காட்டும் வகைகள் ஆகும் என்கிறார்.

சத்திர அதிகாரி : நம்மை ஆள்பவர் பிராமணர்கள். தஞ்சபுரத்தில் பிராமணர்களுக்கு சாப்பாடு வகைகளில் குறை வந்தால் நம் மன்னர் பொறுக்க மாட்டார். யாரும் நகரத்தில் பட்டினியா இருக்கக் கூடாது. நேரம் 12 மணி ஆகிறது. ராமானுஜ கூட்டத்துக்கும், மத்திய கூட்டத்துக்கும், பெரிய சத்திரத்துக்கும் போய்ப் பார்த்தீர்களா ? சாப்பாடு மற்றும் இலைகள் தயாராக உள்ளதா ? பருப்பு, ஊறுகாய், துவையல், தாளிச்ச சாம்பார். ரசம், கீரை வகைகள், காய்கறிகள், பருப்பு பாயசம் அனைத்தும் இருக்கிறதா என்று சத்திர அதிகாரி சுயம்பாகியரிடம் கேட்க, எல்லாம் தயாராக உள்ளது என்கிறார். அப்பொழுது சத்திரத்திற்கு வந்தார்கள் பிராமணர்கள். அவர்கள் அங்க, வங்க, கலிங்க, மகாராஷ்டிர, பங்காள, காஷ்மீர, பாண்டிய நாடுகளிலிருந்தும், காசி, குருக்ஷேத்திரம், காம்போஜம், பாஞ்சால நாடுகளிலிருந்தும், தீராத வறுமையின் காரணத்தினால் பதரி, கேதார, பிரபுச, நைமிச முதலிய புண்ணிய ஸ்தலங்களிலிருந்தும், பப்புதிப்பாப்பட்லு முதலிய கோடி பிராமணர்கள் ஆடிப்பாடிக்கொண்டு சத்திரத்திற்கு வந்தார்கள்.

இந்த ஊர் சத்திராதிகாரி மகாதர்மகர்த்தர். அவரை வணங்கிவிட்டு வருவோம் வாங்க என்று பப்புதிப்பாப்பட்லு கூறுகிறார். இவர்கள் சுலோக வடிவத்தில் சத்திராதிகாரியை வணங்கினர். சத்திராதிகாரி இவர்களைப் பார்த்து, "இது எந்த வேதம்' என்று கேட்க, அதற்கு அவர் ஐந்தாம் வேதம் என்று சொல்கின்றார். அதற்கு சத்திராதிகாரி உலகில் நான்கு வேதம்தான் இருக்கிறது. ஐந்தாம் வேதம் எங்கிருந்து வந்தது. சரி சரி பஞ்சாங்கம் சொல்ல தெரியுமா ? உங்களுக்கு பிரச்னம் சொல்லத் தெரியுமா ? என்று கேட்க, அதற்கு பப்புதிப்பாப்பட்லு, ஓ ! ஓ 1 நல்லாச் சொல்லுவோமே என்று சொல்கிறார்.

இன்றைய தினம் என்ன என்று சத்திராதிகாரி கேட்க, தன்தன வருஷம், தாடேடு மாசம் 28ம்தேதி பஞ்சமி வெள்ளிக்கிழமை, பஞ்சமி $172^1/_2$ பரக, மூலா நக்ஷத்திரம் $192^1/_2$ பரக போக. உபரி பூர்வாஷடம் என்று இந்தவிதமாக பஞ்சாங்கத்தைப் பற்றி பப்புதிப்பாப்பட்லு கூறுகிறார்.

மேலும், சத்திர அதிகாரி ப்ரச்னம் பற்றி கேட்க, பப்புதிப்பாபட்லு சொல்வார், கிழக்கு, வடக்கு, சத்திரம். மன்னர் அருகில் ஆருடம். அச்வினி, பரணி, கிருத்திகா ஒரு பாதம் மேஷம், பரணி பெட்டியில், மேஷம் ஆட்டு மந்தையிலும், ரிஷபம் மாட்டு மந்தையிலும், மிதுனம் ஆண்பெண் கூடிய இடத்திலும், கர்கடகம் வளையிலும், சிங்கம் காட்டிலும், கன்னி பிறந்தார் வீட்டிலும், துலாம் என்பது செட்டியாருடைய வீட்டிலும், விருட்சிகம் விரட்டியிலும், தனுசு பட்டாணியுடைய கையிலும், மகரம் கடலிலும், கும்பம் கொசவன் வீட்டிலும், மீனம் ஏரியிலும், பன்னிரெண்டு ராசிகள் அனைத்தும் இருக்கும் இடத்தில் இருக்கும் என்று பப்புதிப்பாப்பட்லு சொல்கிறார்.

சத்திராதிகாரி அவரைப் பார்த்து, ஓ ! பப்புதிப்பாபட்லு ஜாதகம் சொல்லும் என்கிறார். அதற்கு அவர் சத்திராதிகாரியைப் பார்த்து, சொல்லுவோம், உம் பெயர் என்ன என்று கேட்க, அகற்கு சத்திராதிகாரி என் பெயர் எல்லமராஜு என்று சொல்ல, அதற்கு பப்புதிப்பாபட்லு ஆஹா எல்லமராஜா, ஆ, ஈ, ஊ, எ இவற்றுக்கு கிருத்திகா மூன்று பாதம், ரோஹிணி, மிருகசீர்ஷம் இரண்டு பாதம் ரிஷப ராசி. உங்களுக்கு ரிஷப ராசி. உங்களுக்கு வாகனம் நாய் என்று சொல்வார். சத்திராதிகாரி அவரைப் பார்த்து, ஜாதகம் சொல் என்று சொன்னால் ஏதேதோ சொல்கிறாயே என்று, அடிடா அவனை என்று கோபமாக பேசுவார். உடனே பப்புதிப்பாப்பட்லு, சரி சரி உங்களுக்கு பதினாறு பொருத்தமும் சரியாக உள்ளது என்றார். .

சத்திராதிகாரி நீங்கள் யார் யார் வந்தீர்கள் என்று கேட்க, அதற்கு பப்புதிப்பாபட்லு, நாங்கள் புல்லகூரயல்லம் பட்லு, புல்லேகுலமல்லுபட்லு, பெனுகொண்டகொண்டு பட்லு, குண்டிசர்வாபட்லு, குட்டிதிருமலபட்லு, சவுடிசிங்கரி பட்லு, தல்லுபட்லு, சத்தியமங்களராஞ்சுடு, சுத்தமல்லி அம்பிராய சாஸ்திரி, காவலாங்குடி அப்பம் வாத்தியாரி, கஞ்சனூரி ஆச்சாம்பிள்ளை, மாதல்லுபட்லு முதலியவர்களோடு என்னுடைய மனைவி ஆகிய அனைவரும் வந்திருக்கிறோம். அதைக் கேட்ட சத்திராதிகாரி வெயில், மழை, பனி, காற்று என்பன நினைக்காமல் நீங்கள் வந்திருக்கிறீர்கள். போஜன நேரம் வரும்போது உள்ளே விடுவோம். அப்படி உட்காருங்கள் என்கிறார். அந்த நேரத்தில் சத்திராதிகாரி அருகில் ஆடிப்பாடி பிழைக்கும் கூட்டம் ஒன்று வந்தது. அவர்களிடம் "யார் நீங்கள் எந்த

நாட்டில் இருந்து வந்துள்ளீர்கள் என்று வினவ, அவர்கள் தஞ்சாபுர சத்திராதிகாரி நெல்லூரி எல்லமராஜு என்பவரை அறிந்தவர்களாய் நாங்கள் எங்களது சீமையிலிருந்து வந்தோம். ஆடல்பாடல்களால் உங்களை மகிழ்வித்து பகுமானம் பெற்று செல்ல வந்தோம் என்றனர். அதற்கு அதிகாரி நல்லது, எங்களை ஆளும் மகாராஜாவைப் பற்றி ஒரு பாட்டு பாடுங்கள் அவர்கள் உங்களுக்கு நிறைய பரிசுகள் கொடுப்பார் என்றார். அதிகாரி கூறியது போல் அவர்கள்,

ராகம் : கண்ட தாளம் : ஆதி

பந்தமேலரா விந்த தானகாரா
ரந்துசாய மோரா விஜயராகவ மோக்கோரா
தக்கிதி தயமீரனே சொக்கிதி வீடேமீரா
பக்கபாயலேரா நன்னு பாலினி சேகோரா
நின்னே மதினி கோரிவுன்னானுரா வோரோரி
கன்னுல வில்துனி பாரி கனமாய யீசாரி
ஏரா நன்னு சால யேலரா யீ வேள ! ரதுல ! யே !
ல ரா யீ வேள ! ராரா சாய மேரா விஜயராகவ பூபால

எனத் தொடங்கும் வகையில் பாடலாயினர்.

அந்த நேரத்தில் திப்பா பட்லு, ஓய் ! எல்லமராஜு தம்தம் என்றால் என்ன ? தும்தும் என்றால் என்ன ? ஆர்பாட்டங்கள் சத்தங்கள் என்ன ? என்று கேட்கிறார். அதிகாரி, வேஸியர்கள் எங்களிடம் தியாகம் செய்ய வந்தவர்கள். திப்பாபட்லு வேஸியர்கள் என்ன செய்வார்கள் என்று கேட்கிறார். அதற்கு அதிகாரி, அவர்கள் பொன், பொருள் வாங்குபவர்கள். திப்பா பட்லு, பொன் வாங்குபவர்கள் வெள்ளி வாங்கமாட்டார்களா என்கிறார். அதிகாரி, தூக்கத்துக்கு பொன் வாங்குபவர் என்கிறார். திப்பாபட்லு, விழித்துக்கொண்டிருந்தால் வெள்ளி வாங்குவார்களா என்றார்.

அப்பொழுது வேஸியர்கள், திப்பாபட்லுவைப் பார்த்து அக்னி ஹோத்ர சிந்தாமணி வேதமூர்த்தி வேதநாராயணன் என்பவர் எங்களுக்கு தியாகம் பண்ணியிருக்கிறார் என்று கூறுகிறார்கள் அதற்கு திப்பாபட்லு, ஆஹா ! ஆஹா ! தியாகமா ! வீரபட்லபிள்ளை உயிர்த்தியாகம் செய்தானா ? நல்லது. நாங்களும் தியாகம் பண்ணுவோம். ஆனால் ஒரு பாட்டு பாடுங்கள் என்று கூறுகிறார்.

சௌகிவானிதோனி மோடி சேசு கொம்மனேரு

சனவு இன்தி சன வெட்லாயீடேரு

வனஜாக்ஷி தானி கோசமை தினதினமு போரு

கவி வினிண்டி மீரைனா காதனங்கா லேரு

என்று பாடி ஆடுகிறார்கள். அதைப்பார்த்து திப்பாபட்லு, நன்றாக ஆடுகிறீர்கள் என்று பாராட்டினான். இவர்கள் ஆடுவதைப் பார்த்தால் உடலும் மனமும் எங்கேயோ போகிறது என்று ஹாஸ்யகன் கூறுவவான். இவர்கள் ஆடுவதைப் பார்த்தால் என்னுடைய உடம்பெல்லாம் சுற்றிக்கொண்டிருக்கிறது என்று திப்பாபட்லு கூறினான். அதற்கு தள்ளுபட்லு, அது என்ன பம்பராமா சுற்றுவதற்கு ? என்று கூறினான். அந்த நேரத்தில், காவலாங்குடி அப்பம் வாத்தியார், நாஞ்சுடு, அம்பிராயர் சாஸ்திரி முதலானவர்கள் எங்கிருந்தோ வந்தார்கள்.ரங்கசாணி, வெங்கசாணி இருவரும் நாட்டியங்கள் ஆடுவார்கள், அவர்கள் எப்படி எல்லாம் ஆடினார்கள் என்பதைக் கூறுவது இந்த நாடகத்தின் முக்கிய செய்தியும் ஆகும். இந்த மாதிரி பப்புதிப்பாப்பட்லு, அப்பம் வாத்தியார், வெங்கசாணி ரங்கசாணி ஆகியோர் ஆடிப்பாடினார்கள்.

இந்த விதமாக பப்புதிப்பாபட்லு, அப்பம் வாத்தியார், மாணிக்கம், வேஸியர்கள் அனைவரும் ஆடிப்பாடினார்கள். இந்த நேரத்தில் எல்லம்மா எனும் பிரமான பெண் சிறு பசங்களுக்கு பசி என்று அலறி அடித்துக்கொண்டு ஓடி வருகிறாள். அக்கம் பக்கம் வீடுகளில் சாப்பாடு கேட்கப்படுகிறது. பிறகு நொண்டி, குட்டை, உயரம் என பிராமணர்களை பற்றி பேசப்படுகிறது. பப்புதிப்பாபட்லு காவேரி நதியில் குளித்து காவடி தோளின் மேல் வைத்துக்கொண்டு ஹரி ஹரி என்று உச்சரித்தவாரே வந்தான். அந்த நேரத்தில் சத்திராதிகாரி அவர்களை குளிக்கச் சொல்லுவார். ஆறு ரொம்ப தொலைவில் இருக்கிறது என்று சிலர் பேசுவார்கள். எங்களை ஆளக்கூடியவர்கள் பிராமணர்கள். ஆகையால் உங்களை நாங்கள் சோதிக்கக்கூடாது என்று சத்திராதிகாரி கூறுவார். பிறகு அப்பளம், வடை, என பல வகையான சாப்பாடு வகைகள் தயார் ஆயின. பரிமாரப்பட்டது. அந்த நேரத்தில் பப்புதிப்பாபட்லுடன் பிராமணர்களும் அடுத்தடுத்த இடத்தில் அமர்ந்துகொண்டு இலைகள் போட்டுக்கொண்டு சாப்பிடத் தொடங்கினர்.

சாப்பிட்ட பிறகு அனைவரும் விஜயராகவ நாயக்க மன்னனை பலவிதமாக போற்றினார்கள். சத்திராதிகாரி அவர்களுக்கு பரிசுகள் தந்தார். அவர்கள் அதை மகிழ்ச்சியுடன் பெற்றுக்கொண்டார்கள். அதற்கு பிறகு வேஸியர்களுடன் சிலர் ஆடிப்பாடிக் காலத்தை கழித்தனர். இந்தவிதமாக சத்திரத்தில் தங்கியவர்கள் இந்த வேஸி முதலானவர்களுடன் காலத்தைக் கழித்தனர்.

மதன கதன என்ற ஒரு வியாபாரி எங்கிருந்தோ வந்தான். அந்த வேஸியர்களிடம் அறிமுகப்படித்திக்கொண்டு, பிறகு அவர்களிடம் சலசல என பேசிக்கொண்டு நாம் எங்கே இருக்கிறோம் என்று கேட்க, அவர்கள் (வேஸி முதலியவர்கள்) கோயிலில் என்று சொல்ல, கோயில் எங்கே இருக்கிறது என்று கேட்டதற்கு, கோட்டையில் என்று சொன்னார்கள். கோட்டை எங்கே என்று கேட்க, தஞ்சாபுரியில் இருக்கிறது என்று சொன்னார்கள் வேஸி முதலானவர்கள்.

நம்மை ஆளக் கூடியவர்கள் லட்சம் பேர்களுக்கு அன்னதானம் போடுவார்களே. அந்த தஞ்சாவூர் பிராமணரே நேற்று பந்தியில் உட்கார்ந்து பெண்டாட்டி, பிள்ளைகளுடன் சாப்பிட்டதை மறந்த போனாயோ, என்று அவர்கள் சொல்ல, நாம் ஒவ்வொரு ஊரும் சுற்றிக்கொண்டு, பருப்பு, கசகசா, மிளகு போன்ற பொருள்களை தெருவில் சுற்றிக்கொண்டு விற்பதயே மறந்தேன். நான் யார் என்று கேட்பான் மதனபதன்.

இந்த விதமாக லக்ஷம் பிராமணர்களுக்கு மன்னாரு தாச மன்னனுக்கு ஹேமாப்ஜநாயிகா ராஜகோபாலர்க்கு ஆயுசு, ஆரோக்யம், போக பாக்கியங்களுடன் சந்தான சம்விருத்தி சாம்ராஜ்யங்களோடு அபிவிருத்தி பெற்று சகல பாக்கியங்களும் சம்ருத்தியோடு அளித்து காப்பாற்றுவார் என்று விஜயராகவ நாயக்க மன்னனை அனைவரும் போற்றினார்கள். பல ஆண்டு காலம் வாழ்க வாழ்க என அனைவரும் மன்னரை வாழ்த்தினார்கள்.

இந்தவிதமாக இந்த தஞ்சாபுர அன்னதான மகா நாடகம் D. No. 684,சு. எண். 529லிருந்து எடுத்து எழுதப்பட்டது. இச்சுவடி தெலுங்கு மொழியில் எழுதப்பட்டதாகும். இந்நூலின் ஆசிரியர் புருஷோத்தம தீக்ஷிதர் ஆவார். இந்நூலில் தஞ்சாபுரியில் நிலவிய அக்கால நிலைமையை பற்றி விவரமாக தெரியப்படுத்துகிறது. அந்த காலத்தில் தீராத வறுமையின் காரணமாக பல நாடுகளில் இருந்து வந்தவர்களை அன்னமளித்து காப்பாற்றிய பெருமையுடையவர் விஜயராகவ நாயக்கமன்னர் ஆவார் என்பதை இந்நூலின் வாயிலாக நாம் அறிய முடிகிறது.

# SOMAVAR AMAVASYA VRAT KATHA*

**USMAD RAYBHAN GEDAM**, M.A., M.Lib. & I.Sc., M.Phil.,
Marathi Pandit & Modi Dept.( i/c.)
T.M.S.S.M. Library
and Research centre,
Thanjavur.

There are manual number in Thanjavur Maharaja Serfoji's Sarasvati Mahal Library & Research centre. And all these manuals are in different varieties and the description has been given from marathi Catalogue. In this catalouge one Section is about Vow myth (Vrat Katha). There are number of such myths which are related some how to "puranas". But these mythical stories has been written in Marathi as Vow stories. The purpose behind it was to follow religion and enlightenment.

No one can read all the books. So some stories has been selected from it. These Vow myths are in two forms. One in prose and second in verse. By the prose form vow myths, it clears prose form of marathi before Anglo period in Thanjavur region, and it also clears the verse form. When there was the region of Bhosale in Tanjavur there was great scope for prose verse marathi literature, and one of form is Vow myth.

Vow stories are religios Stories. The purpose of it is to bring good principles in life. All these stories are related to human beings. By the study of these stories we can know the life of marathian in period of Bhosle from Tanjavur region, peoples, customes, religion faith, their rituals can be understood from these stories. Specially these myths through a light on the structure of marathi, its dialogues, words maxims, phrases dialects etc.

Tanjavur is the Tamil region. This language is very ancient but developing and progressive one. This language have influence marathi directly or indirectly. This effect is in different manner sometimes on words, on sometimes structure and

* **Author - Krushnasut, MSS. No. 2982, D. No. 3268. A.D. 1862. S. No. 131**

sometimes on pronunciation. And that's why these Vow myths are mixure of Tamil and marathi language. By such reading we can know the life customes of people.

Here one of the Vow myth has been presented "Monday Amavasya Vrat." The writer of this myth is "Krishnasut". This myth has been presented in dialogue from between Yudhustir and Bhishma The main characteristic of this myth is that Krishnasut was in Tanjore in 1862. That time it was last period of Bhosaleregion. Gradually English was spreating towards Tanjavur and in such period, it has been written.

The connotative meaning of this myth is that "Somavar Amavasya" has been called as "Somvati Amavasya." This is the holy and devine period especially, on that day, it has been said that after taking bath in river, hole day making fast, religious ceremony like worshiping Shivlinga is expected. All these has been well described, in this myth. In the human life the cycle of sorrow and happiness is continuous. Sometimes person is rich and sometime very poor. At some moment he shows bravery and sometimes becomes victim of suffering, such cycle is continuous. But the sad and worries can be avoided by worshiping Shiva. Sometimes unintentionly, some mischievous act has been commited by us and we regreat for that and for such remedy has been told of that vow myths.

In such matters worshing to God and accepting the vows spotaeniously in other words person has to montain. Some limitations and by worshiping to God one has to make oneselt free, from that for that such myths has been written. And this Somvar Amavasya is vow myth. The language of this myth is simple and straight, the method for this story is explanatory and narratory. Sometimes some dialouges has been used, so it has become effective. By this it seens how neglected "Marathi Literature" has been preserved by Thanjavur Region and for the study of Social Living such myths are of much importance.

Somvar Amavasaya Vow myth is one myth which is one type of literature In English abundance writting can be found in story writing, we can find such myths in $20_{th}$ century it has been started in ancient Marathi literature as 'story' Hari Narayan

Apate, one of well known Marathi novelist has brow make it famous, furthur N. C. Fadke, N.S. Khandkar, P.B. Bhave, Wamanrao chorghade, Gangadher Godgid, Mirasdar and so such writers have handled this skillfully. And gradually it has been called as a Laghukatha (small stories).

Today, this type in Marathi literature is very famous. In numerous newspapers magazine such new small stories has been published. Number of writers have published their books. At beginning it was using narrating and explaning method. After that by giving importance to one particular incident such short stories were written. After sometime its nature changed and the importance were giving on one character's portration.

Some short stories are autobiographical. In such stories they started to tell the Incidents from their own life, gradually it turn towards Psyche condition and inner thought of mind of a person some short stories tries to depict the Social problems. Though it they tries to depict some incidents and problems. Some short stories are suspence type and some are comic. All the human characteristics and incidents are gradualy depicting in such stories. Some writers looks towards some problem in comic manner. The origin of such short stories is form before English period.

In ancient Marathi literature there, are number of references about myth. In Sanskrit Literature 'Panchtantra' are in story types. There are number of Folktale in ancient Marathi Literature. The language used for it simple and straight one and with full of imagination the nature description and imagination have much importance in that. All the folktale have happy ending like. Folktale another class is of puranas (myths).

In Ancient Marathi literature 'Kalpataru' is well known and written by 'Krishnayadnyawalki.' This has been published in verse from. Some stories in puranas has used the teaching method vow myths. Pilgrimage for holy place and vows are two religions part of life. Vows myth are always with some purpose, for Fame, success, religion, or for avoiding some problams. It has been maintained 'Krishnasut' has made 'Marathi' vow myth well known by writing it.

Krishnasut is a liturgical poet. He wrote some vow myth (Vrat Stories) and Krunshpad. As we seen in language that he was posterior. May be he was some period of Pratap Sing and other Serfoji II. Nobody achieved handwriting literature are any other copies. So we con't compare with any other. We are not able to give details conformation about Krishnasut.

This is the only manual founded by Krishnasut number of it is MSS. No.2982, D> No. 3268 on that basis. We are publishing this part.



# सोमवार अमावस्या व्रत कथा

तंजाऊर महाराजा सरस्वती महल लायब्ररी आणि रिसर्च सेंटर मध्ये असंख्य मराठी हस्तलिखिते आहेत. हि हस्तलिखिते विविध रूपात आहेत. आणि त्यांचे सगळे विवरण मराठी कॅटलॉग मधून करण्यात आलेले आहे. या कॅटलॉग मध्ये एक विभाग व्रत कथाचा आहे. आणि त्यामध्ये वेगवेगळ्या व्रत कथा आढळतात या सगळ्या व्रत कथा पौराणिक आहेत. परंतू या पुराण कथा मराठीत व्रत कथा रूपाने लिहिण्यात आल्या त्यामागे धर्म आचरण आणि प्रबोधन हे उद्देश होते.

कोणतीही व्यक्ती सगळी पुस्तके वाचु शकत नाही म्हणून पुराणातुन निवडक कथा निवडण्यात आल्या आणि त्या सादर करण्यात आल्या या व्रत कथा दोन प्रकारच्या आहेत. एक तर त्या गद्यात

आहेत, किवा पद्यात आहेत. गद्यातील व्रत कथामुळे आग्लपुर्व काळातील तंजाऊर प्रदेशातील मराठी गद्याचे स्वरूप स्पष्ट होते. तसेच पंद्याचे स्वरूपहीस्पष्ट होते. तंजाऊरला भोसल्याचे राज्य असताना गद्यपद्य प्रधान मराठी साहित्य निर्माण झाले. त्या साहित्याचा एक प्रकार व्रत कथा आहे.

व्रत कथा हया धार्मिक कथा आहे. त्यांचा उढदेश उत्तम प्रकारचे संस्कार करणे हा आहे. पण त्याबरोबर या सर्व कथा मानवी जिवनाशी संबंधीत आहेत. या कथेच्या अभ्यासाने तंजाऊर प्रदेशातील भोसले कालीन मराठी जिवनावर प्रकाश पडतो. लोकांच्या समजुती, धारणा, धर्मविषयक विश्वास, यावर उत्तम प्रकाश पडतो. विशेषता या व्रत कथा तंजाऊर मराठी भाषेचे स्वरूप त्यातील शब्द संपदा, वाक्यप्रचार व मनी आणि समाजाची बोलभाषा यांचे दर्शन घडवून देते.

तंजाऊर प्रदेश हा तामीळ भाषेचा प्रदेश आहे. हि भाषा अतिशय प्राचीन असून संपन्न व विकसित आहे, या भाषेचा प्रभाव कळत नकळत मराठी भाषेवर पडलेला आहे. हा प्रभाव कधी शब्द कधी वाक्यरचना, कधी शब्दउच्चार तर कधी वाक्यप्रचार व मनी यातून दिसून येतो व त्यामुळे या व्रत कथा तामीळ व मराठी भाषेचे एक मिश्र रूप आपल्याला स्पष्ट करते. अश्या या कथेचा अध्ययनाने लोकजीवन व लोकपरंपरा यांचे ही अध्ययन होते.

या ठिकाणी "सोमवार अमावस्या व्रत" कथा सादर केलेली आहे. या कथेचा लेखक "कृष्णसुत" नावाचा कवी आहे. यांनी हि भविष्योत्तर पुराणाच्या आधाराने लिहिली आहे. हि कथा युधिष्ठीर व भिष्म यांच्या संवादात्मक पध्दतीची आहे. या कथेचे प्रधान वैशिष्ट्ये असे आहे की 'कृष्णसुत' नावाची कवी इ. स. १८६२ मध्ये तंजाऊर येथे होता. त्यावेळेस भोसले राज्याचा अखेरचा कालखंड होता, हळुहळु इग्रंजी तंजाऊर कडे येऊ लागली होती. अश्या मध्यकाळात हि कथा लिहिण्यात आली,

या कथेचा भावार्थ असा आहे की "सोमवारची अमावस्या" हिला "सोमवती अमावस्या" असे म्हणतात हा योग पुण्यकारक पर्वाचा असतो. विशेषता या दिवशी नदी स्नान करून दिवसभर उपवास करून शिवपुजन करावयाचे असते. हा सर्व कथा भाग या कथेत आलेला आहे. मानवी जिवनात सुख दुःखाचे चक्र सतत चालू असते. कथी व्यक्ती एश्वर्य संपन्न असते. तर ती कधी दरिद्री होते. कथी व्यक्ती पराक्रम गाजविते, तर कधीकधी वेगवेगळ्या व्याधीनी जर्जर होते. असे हे सुख दुःखाचे चक्र सतत चालु असते. परंतु व्यथा किवा दुःख यांचे निराकरण शिव पूजेने होते. काही वेळा आपल्याकडून किवा व्यक्ती कडून अनुचित गोष्टी घडतात. त्यांची खंत त्या व्यक्तीला वाटत असते. यासाठी पुरानकारांनी व्रत कथा हा उपाय सांगीतला आहे.

व्रत कथेमध्ये परमेश्वराचे पूजन असते. शिवाय कोणतेही व्रत हे आपण होऊन स्विकारावे लागते. वेगळा भाषेत व्यक्तीने स्वताः काही मर्यादाची बंधने पाळावी लागतात व या बधानातून ईश्वराची पूजा करून आपले दुःख, आपली व्याधी, आपले संकट यांचे निराकरण करावयाचे असते यासाठी ज्या वेगवेगळया व्रत कथा लिहिण्यात आल्या त्यापैकी "सोमवार अमावास्या व्रत कथा" आहे. या व्रत कथेची भाषा साधी, सोपी व सुलभ आहे. कथेत वर्णन व कथन पध्दतीचा अवलंब केला आहे. योग्य ठिकाणी संवादही आलेले आहेत. त्यामुळे कथावस्तू परिणामकारक होते व नाट्यमयता साधते. या व्रत कथेचा जो जो अभ्यास करावा तो तो मराठी उपेक्षित साहित्याचे एक अंग तंजाऊर प्रदेशाने कसे जोपासले हे दिसुन येते. याशिवाय समाज जिवनाच्या अभ्यासासाठी अश्या प्रकारच्या व्रत कथा फार उपयुक्त ठरतात यात शंका नाही.

"सोमवार अमावस्या व्रत कथा" हि कथा असून तिचा पौराणिक विषय आहे. तसे पाहिले तर कथा हा एक वाङ्मयातील रचना प्रकार आहे. इंग्रजीमध्ये या रचना प्रकाराविषयी विपुल लेखन झाले आहे. "Story writing" या नावाने हा रचना प्रकार इंग्रजी साहित्यात प्रसिध्द आहे, विशाव्या

शतकात "गोष्ट" या नावाने हा रचना प्रकार अर्वाचीन मराठी साहित्यात सुरु झाला. हरी नारायण आपटे, सुप्रसिध्द मराठी कादंबरी काराने या रचना प्रकाराला नामरूप दिले. पुढे काही दिवसानी ना. सी. फडके, या क्षेत्रात उतरले, वि. स. खाडेकर, पु. भा. भावे, वामनराव चोराघडे, गंगाधर गाडगीळ, मिरासदार इत्याही अर्वाचीन लेखकांनी हा रचना प्रकार निटपणे हाताळला आणि त्याला लघुकथा हे नाव दिले.

आज हा रचना प्रकार मराठी साहित्यात सुप्रसिध्द झाला आहे. असंख्य मासिके, वर्तमानपत्रे, यामधून नित्यनव्या लघुकथा प्रसिध्द होत असतात अनेक सुप्रसिध्द लेखकाची पुस्तकेही निघालेली आहेत. सुरुवातीला कथन आणि वर्णन असे गोष्टीचे स्वरूप होते. त्यानंतर लघुकथा हे नाव मिळाल्यावर एखादया प्रसंगाला व घटनेला महत्व देण्यात आले व घटना पध्दतीच्या लघुकथा लिहिण्यात आल्या काही लघुकथा पत्रात्मक पध्दतीच्या आहेत. यानंतर या कथा प्रकारात बद्दल झाला.

कथेतील व्यक्तीचे व्यक्ती चित्रण कलाकार रेखाटू लागले.

काही लघुकथा आत्मकथन पर आहेत. आपल्या आयुष्यातील घटना प्रसंग, मनमोकळे प्रसंग, कथेतील व्यक्तीत सांधू लागले. हळूहळू व्यक्ती चित्रणाकडून व्यक्तीच्या मानसिक अवस्थाचे दर्शन लघुकथा लेखक करु लागले. काही लघुकथा सामाजिक समस्या सादर करणाऱ्या आहेत. त्यामधून समाजात वेळोवेळी उद्‌भवणारे प्रसंग आणि समस्या यांचे चित्रण येऊ लागले, काही लघुकथा रहस्यप्रधान असतात.

तर काही विनोदी असतात. अश्या प्रकारे मानवी जिवनांचे तऱ्हेतऱ्हचे प्रसंग लघुकथा या वाङ्‌यप्रकारातून चित्रित होऊ लागले. काही लघुकथा काही प्रश्न किवा समस्या खोलवर विचार करून हाताळतात. त्यामधुन त्यांचे कादंबरी या वाङ्मय प्रकारा विषयीचे नाते स्पष्ट होऊ लागले. अशी आजची मराठी लघुकथा सुप्रतिष्ठीत असलीतरी या वाङ्मय रचना प्रकाराचा उगम इग्रंजी काला पुर्वी झाला होता.

प्राचीन मराठी साहित्यात कथा विषयी अनेक ग्रंथ आहेत. संस्कृत साहित्यातील 'पंचतंत्र' किवा 'हितोपदेश' हे ग्रंथ कथा रचना प्रकारात आहेत. प्राचीन मराठी साहित्यात असंख्य लोककथा आहेत. या लोककथा साधा, सरळ, व सोप्या भाषेत असतात. व त्या कल्पना युक्त असतात. त्यातील निसर्ग रमणीय असतो त्यामध्ये कल्पना बंध यांना मोठे स्थान असते. काही लोक कथा रसपूर्ण असल्यातरी सर्व लोककथा यांचा शेवट सुखांतिक असतो. लोककथा प्रमाणेच कथेचा संग्रह करणारा दुसरा वर्ग पुराण साहित्याचा आहे.

प्राचीन मराठी साहित्यात कथा "कल्पतरु" सुप्रसिध्द ग्रंथ आहे. याचा कर्ता कृष्णयाज्ञवलकी आहे. हा ग्रंथ पद्य रूपात प्रसिद्ध झाला. पुराणात ज्या कथा आहेत. त्यापैकी काही कथा आख्यान पद्धतीचा आहे. काही उपदेश प्रधान कथा आहेत. काही कथा मात्र व्रत कथा आहेत. तीर्थयात्रा आणि व्रते हि आपल्या जिवनातील दोन धार्मिक अंगे आहेत. व्रत कथा या प्रामुख्याने सहेतुक असतात, यश, किर्ती, धार्मिक अंग, नावलौकिक किवा व्याधी दूर करण्यासाठी व्रत करीत असतात. कृष्णसुत याने व्रत कथा लिहून मराठी व्रत कथेचे दालन समृध्द केले आहे.

कृष्णसुत हा काव्य करणारा कवी आहे. त्यांने काही व्रत कथा तसेच कृष्णपर पद लिहिलेले आहेत. भाषेवरून हा कवी उत्तरकाळातीत दिसतो. बहुधा हा कवी प्रतापसिंह दूसरे व सेरफोजी दूसरे यांच्या समकालीन असावा. तसेच हया हस्तलिखिताच्या नावाच्या व लेखकाच्या इतरही प्रती उपलब्ध झालेल्या नाही. त्यामुळे तुलना किवा फरक अशी सविस्तर माहिती देता येनार नाही.

कृष्णसुत या ग्रंथकाराचे उपलब्ध झालेले हे एकमेव हस्तलिखित आहे. त्यांचा क्रमाक MSS No. 2982 D. No, 3268 आहे. त्यावरूनच आम्ही हि सहिता प्रसिद्ध करीत आहे.


தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின் சரசுவதி மகால் நூலகம்
மற்றும் ஆய்வு மையம்